Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 12 ஹிஜ்ரி 1428 சஃபான் 23 (28.09.2005) புதன்கிழமை இதழ்:363





யாழ் நகரில் புதிதாகத் தனது சேவையை ஆரம்பித்து, விஸ்தரித்து வருகின்றது.

முற்றிலும் இரும்பு உருக்கிலான (Steel) தளபாடங்கள், உபகரணங்கள்.

உறுதியான வடிவத்திலும், உத்தரவாதத்துடனும் நீங்கள் விரும்பியவாறு செய்து பெற்றுக்கொள்ளவும்.

சகலவித வெல்டிங் வேலைகளுக்கும்,

KKJ

Work Shop & Sales Centre

No. 11, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். T.P:- 0777903720[3]


## இன்று தமிழ்த்தேசிய மாநாடு; மன்னார் நகர் எழுச்சிக்கோலம்!

மன்னார் —

வவுனியாவில் வெளியிட்ட தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடனத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஐந்தாவது எழுச்சி மாநாடு மன்னாரில் இன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடனத்தினை சர்வதேச சமூகத்துக்கு உரத்து குரல் கொடுப்பதற்காக அனைத்து மக்களையும் மன்னார் பொது விளையாட்டரங்கில் ஒன்று திரளுமாறு மன்னார் மாவட்ட எழுச்சிப் பிரகடன ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த மாநாட்டையொட்டி மன்னார் நகர் விழாக்கோலம் பூண்டுள்ளது.

இன்று மாலை 3 மணிக்கு மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் இருந்தும் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாநாட்டுக்கு செல்லும் மக்களின் போக்குவரத்துக்காக இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர், மலையக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொங்குதமிழ் நிகழ்வுக்கு ஆதரவாக வடமராட்சியில் மாணவர் பேரணிகள்!

வடமராட்சி —

தற்போது நடை முறையிலுள்ள தமிழீழ அரசாங்கத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி - யாழ்.பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்துள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வையொட்டி வடமராட்சி மாணவர்களால் சைக்கிள் பேரணி நடத்தப்பட்டது.


இந்தப் பேரணியில் வடமராட்சி பாடசாலைகளைச் சேர்ந்த ஐந்நூறுக்கு மேற்பட்ட உயர் தர வகுப்பு மாணவர்கள் பங்குகொண்டனர்.

நேற்று வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியிலிருந்து ஒரு பேரணியும், இன்னொரு பேரணி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் ஆரம்பமாகி வடமராட்சி பிரதேசத்தை வலம் வந்தன.

காலை 8.30 மணிக்கு வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியிலிருந்து சிவப்பு, மஞ்சள் கொடிகளை சைக்கிளில் கட்டியவாறும், கையில் ஏந்தியவாறும் ஆரம்பித்த சைக்கிள் பேரணி வல்வெட்டித்துறை சந்தியூடாக (12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரிவினையில்லாத அரசியல் தீர்வு; நவீன ஆயுதப்படை உருவாக்கம்!

## ஐ.தே.க தேர்தல் அறிக்கையில் குழப்பம்



கொழும்பு —

தாம் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் இனப்பிரச்சினைக்கு நாட்டைப் பிளவுபடுத்தாத ஒரு தீர்வை ஏற்படுத்துவதாக உறுதியளித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப நவீன ஆயுதப்படை ஒன்றை - 6 படைத்துறைகளை ஒன்றிணைத்து உருவாக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று சிறிகோத்தாவில் வெளியிடப்பட்டபோதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் வன்முறை சம்பவங்கள்; ஐரோப்பிய யூனியன் கண்டனம்!

லண்டன் —

இலங்கையில் தொடரும் வன்முறைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டியுள்ள பிரிட்டன் - இது தொடர்பாக ஐரோப்பிய யூனியனின் சார்பில் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐரேப்பிய யூனியனுக்கு இம்முறை தலைமை வகிக்கும் பிரிட்டன், இது தொடர்பாக நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்-

அரசியலில் முன்னெடுத்துச் செல்லப்படும் இலக்குகளுக்கு ஏற்றுக் கொள்ளமுடியாத செயல்கள் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், சமாதான நடவடிக்கைகளுக்கு பாரிய அச்சத்தை யும் ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட அண்மைக்காலமாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொம்மை வெளியில் பெண் சுட்டுக்கொலை!

## நாடாளுமன்றக் கலைப்பு வெறும் ஊகங்கள்தான்!

# பொம்மை வெளியில் பெண் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம் —

யாழ். பொம்மைவெளிப் பகுதியில் இனந் தெரியாத நபர்களால் பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை 6.30 மணியளவில் பொம்மைவெளி குடியேற்றத் திட்டப் பகுதியில் இடம்பெற்றது. ஜெயராசா லீலாவதி (வயது 47) என்ற பெண்ணே சுட்டுக் கொல்லப்பட்டவராவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

மேற்படி பெண் நேற்றுக்காலை தண்ணீர் எடுப்பதற்கு குடத்துடன் சென்ற போது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றனர். தலையிலும், நெஞ்சுப்பகுதியிலும் காயமடைந்த மேற்படி பெண் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவ இடத்திற்கு நேற்றுக்காலை சென்ற மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் விசாரணைகளை மேற்கொண்டார். சம்பவ இடத்திலிருந்து பிஸ்ரல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றக் கலைப்பு வெறும் ஊகங்கள்தான்!

## சுதந்திரக் கட்சி கூறுகிறது

கொழும்பு

ஜனாதிபதி சந்திரிகா தனது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் நாடாளு மன்றத்தைக் கலைப்பாரென ஊடகங்களில் வெளியான செய்தியை சிறிலங்கா சுதந்திரக்கட்சி நிராகரித்துள்ளது.

இது குறித்து ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த அமைச்சர் மங்கள சமரவீர - நாடாளு மன்றம் கலைக்கப்படுவதாக ஊடகங்களில் வெளியான செய்தியில் எவ்வித உண்மையுமில்லை.

1981ஆம் ஆண்டு தேர்தல் சட்ட விதிகளின்படி ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டபின்னர் நாடாளுமன்றுக்கு தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை வெளியிட அரசியல் அமைப்பில் அதிகாரம் வழங்கப்படவில்லை. எனவே ஜனாதிபதியிடம் நாடாளு மன்றம் கலைப்பதற்கான திட்டம் எதுவும் ஊடகங்கள் கூறுவதுபோல் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

# புலிகள் நோர்வேக்கு செல்ல எந்தத் தடையும் இருக்காது!

## அரசியல் அவதானிகள் கருத்து

லண்டன் —

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு விடுதலைப் புலிகள் பயணம் செய்யக்கூடாதென ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ள முடிவு தற்காலிகமானதே. இது புலிகளுக்கு விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கையாகவே பார்க்கவேண்டும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கருத்து வெளியிடுகையில் -

விடுதலைப் புலிகள் அரசியல் மார்க்கத்தில் முழுமையான ஈடுபாடு காட்டினால், ஐரோப்பிய ஒன்றியம் இறுக்கமான நிலையைக் கைவிட்டு மென்மையான போக்கை கடைப்பிடிக்கும்.

இந்த முடிவை விடுதலைப் புலிகள் மிகவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஓட்டோச் சாரதி சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - கல்லடி திருச்செந்தூரில் ஓட்டோ சாரதியொருவர் நேற்றுக்காலை நண்பகல் 12.30,மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இருதயபுரத்தைச் சேர்ந்த தென்னக்கோன் முதியன்சலாகே சுனில் (வயது 46) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

மட்டக்களப்பு நகரிலிருந்து நாவலடியில் வாடகைக்கு அமர்த்தியவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டனின் குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் நிராகரிப்பு!

கிளிநொச்சி —

ஐரோப்பிய யூனியனுக்குத் தலைமை வகிக்கும் பிரிட்டன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தம்மீது தெரிவிக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களைப் புலிகள் நிராகரித்திருப்பதாக, அசோசியேட் பிரஸ் செய்தி தெரிவித்தது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் ஊடக ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்ரர் ஏ.பிக்கு கருத்து வெளியிட்டபோது -

விடுதலைப் புலிகள் பயங்கரவாத இயக்கம் அல்ல. தமிழ் மக்களின் உரிமைகளுக்காக நாம் போராடி வருகிறோம்.

பிரிட்டனின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.


EXPOAIR
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
*Your friend in the skies...*
இலங்கையில்
முன்னணி வகிக்கும்
உங்கள் உள்ளூர்
விமான சேவை...


# உலக வங்கியின் அதிகாரிகள் இன்று யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கில் அவசர புனர் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்து வரும் உலக வங்கியின் உயர் மட்ட அதிகாரிகள் குழு இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

உலக வங்கியின் வடக்கு - கிழக்கு மாகாண அவசர புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டட நிர்மாணப் பணிகளை பார்வையிடுவதற்காகவே இந்தக் குழுவினர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இந்தக் குழுவினர் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் அரச அதிபர் கே.கணேசைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். 11 மணிக்கு கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து அங்கு முன்னெடுக்கப்படும் பல உலக வங்கியின் அவசர புனர்வாழ்வு திட்டங்களை பார்வையிடுவதுடன், பிரதேச செயலக கட்டட பணிகளையும் பார்வையிடுவர்.

மாலை 2 மணிக்கு மேற்படி திட்டத்தின் கீழ் பண்ணையில் நிர்மாணிக்கப்பட்ட மார்புப்புற்றுநோய் சிகிச்சை நிலையம், மருந்தக களஞ்சியம் ஆகிவற்றைத் திறந்து வைக்கவுள்ளனர்.

## பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் தினமும்

யாழ்ப்பாணம் —

மயிலணி சைவ வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் நினைவு தினமும் இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நா.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.சண்முகநாதன், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குபேரநாதன், பிரம்ம ஸ்ரீ ச.சண்முகானந்தக் குருக்கள் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அதிபர் கே.செல்வக்குமார் நிறுவுனர் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார். (91)

## மெண்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம் —

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபை - உள்ளூராட்சி சபைகளுக்கிடையில் 11 பேர் பங்குபற்றும் 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளது. அத்துடன், பிரதேச சபைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் 6 பேர் பங்குபற்றும் 5 ஓவர்கள் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டியையும் நடத்தவுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் உள்ளூராட்சி மன்றத்தின் பிரதேச சபைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் தமது விண்ணப்பங்களை செயலாளர், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி என்ற முகவரிக்கு அடுத்த மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பிரதேச சபை நிர்வாக உத்தியோகத்தர் கு.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

## மார்பு நோய் சிகிச்சை நிலையத் திறப்பு விழா!

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் - பண்ணையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தினதும், பிராந்திய மருந்துக்களஞ்சியத்தினதும் திறப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உலக வங்கியின் சிரேஷ்ட நடவடிக்கை அதிகாரி டொக்டர் துரைசாமி பிரதமவிருந்தினராகவும்,

மாகாண பிரதிச் செயலாளர் கே.மகாலிங்கம், மாகாண பிரதிப்பணிப்பாளர் டொக்டர் எஸ்.குமரவேற்பிள்ளை, அரச அதிபர் கே.கணேஸ் அகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கட்டடங்கள் உலக வங்கியின் நிதியுதவியுடன் புனர் நிர்மாணம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய இளைஞர் சேவை மன்றம் நடத்தும் இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி

யாழ்ப்பாணம் —

ஜனாதிபதி செயலகத்தின் துரித தொழிற்பயிற்சி திட்டத்தின் கீழ் - யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் வழிகாட்டலில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தால் இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பசிற்சிகள் அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொழிற் பயிற்சித் திட்டத்தில் குழாய் பொருத்துனர், அழகு கலை, வர்ணம் தீட்டும் பயிற்சிகள், என்பன நடைபெறவுள்ளன.

குழாய் பொருத்துனர் பயிற்சிக்கு 60 ஆண்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி சண்டிலிப்பாய், கோப்பாய், கரவெட்டி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் வழங்கப்படவுள்ளன.

பெண்களுக்கான அழகுக் கலைப் பயிற்சிக்கு 25 பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான பயிற்சி வகுப்பு யாழ்.பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. வர்ணம் தீட்டும் பயிற்சிக்கு 20 ஆண்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு விண்ணப்பிப்பவர்கள் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக தரம் 8 வரை கல்வி கற்று இருப்பதுடன், பயில விரும்பும் பயிற்சியாளர் 18 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி பயிற்சியைத் தொடர விரும்புவோர் தமது சுயவிபரத்தோடு தாம் தெரிவுசெய்த பயிற்சி நெறியின் பெயரை குறிப்பிட்டு உதவி இயக்குநர், தேசிய சேவைகள் மன்றம், மாவட்ட அலுவலகம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அடுத்தமாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும் என இளைஞர் சேவை மன்றத்தின் உதவி இயக்குநர் தெரிவித்தார்.

## தொழில்நுட்பக் கல்லூரியில் கல்விகற்ற மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம் —

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பை ஆராயும் முகமாக தகவல்கள் திரட்டப்படுகின்றன. மேற்படி மாணவர்கள் தங்களுடைய சுயவிபரக் கோவையுடன் எதிர்வரும் 03 ஆம் திகதி தொடக்கம் 07 ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் 12.30 மணிவரையும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி தொழில் வழிகாட்டல் ஆலோசனை நிலையத்தில் தங்கள் பதிவை மேற்கொள்ளுமாறு கல்லூரியின் அதிபர் கேட்டுள்ளார்.

## 50 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாய்ப்புற்று நோய்க்கான இலவச மருத்துவ முகாம்

சாவகச்சேரி —

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எதிர்வரும் சனிக்கிழமையும், ஞாயிற்றுக் கிழமையும் 50 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாய்ப்புற்று நோய்க்கான இலவச மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

மருத்துவ முகாம் நடைபெறும் இடங்கள் பின்வருமாறு - சனிக்கிழமை காலை 8.30 தொடக்கம் 12.30 வரை உசன் மகாவித்தியாலயம், விஷ்ணு வித்தியாலயம் மறவன்புலவு, அன்று காலை 8.30 தொடக்கம் 12.30 மணிவரையும் மாலை 1.30 தொடக்கம் 4.30 மணி வரையும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சாவகச்சேரி, ஆரம்ப சுகாதார நிலையம் கச்சாய், மத்திய மருந்தகம் வரணி, வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆகிய இடங்களிலும், அன்றைய தினம் மாலை 1.30 தொடக்கம் 4.30 மணி வரை மத்திய மருந்தகம் மிருசுவில், பிரதேச சபை அலுவலகம் நாவற்குழி,

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 தொடக்கம் 12.30 மணி வரை ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுவில், சுகாதார வைத்தி அதிகாரி பணிமனை சாவகச்சேரி, சண்முகானந்தா வித்தியாலயம் கல்வயல், அன்றையதினம் 8.30 தொடக்கம் 12.30 மணிவரையும் 1.30 தொடக்கம் 4.30 மணி வரையும் முத்துக்குமாரசாமி வித்தியாலயம் கைதடி, குருசாமி வித்தியாலயம் கைதடி, கமலாசினி வித்தியாலயம் மட்டுவில், அன்றையதினம் 1.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை ஸ்ரீ பாரதி வித்தியாலயம் மந்துவில், பிரதேச சபை மாநாட்டு மண்டபம் கொடிகாமம், அமிர்தாம்பிகை வித்தியாலயம் நுணாவில் ஆகிய இடங்களில் 50 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இந்த இலவச மருத்துவ பரிசோதனையில் பங்குபற்றி பயனடையுமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

நாகம்ஸ் சுன்னாகம்
சிறிகாந்த், சோனியாஅகர்வால், மற்றும் பலர் நடித்த
ஒரு நாள் ஒரு கனவு
30 ஆம் திகதி முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடான
ஜெயம் ரவி நடித்த
மழை
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்னும் சில தினங்கள் மட்டும்...!
மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஷ் நடித்த
கிச்சா வயது 16
அடுத்த வெளியீடு!
சரத்குமார், நமீதா வடிவேல் நடித்த
சாணக்யா
காட்சிகள் : 10.30, 2.30, 5.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
4 ஆவது வெற்றி வாரமாக
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
நியூ புகழ் -எஸ்.ஜே.சூர்யா, நிலா
அன்பே ஆருயிரே
நாளை முதல்
சூர்யா, அஸின் நடித்த
கஜினி
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம்,சதா, விவேக் மற்றும் பலர்நடித்த
அந்நியன்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

யாழ்.மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கம்
பாராட்டி வாழ்த்துகின்றோம்

நடபெற்று முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக மீண்டும் ஒருதடவை தமிழர் திறமையினை வெளிக்காட்டிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்களான -


நாகேந்திரம் பாகோபன் (கணிதம் - 4 ஆம் நிலை)


பொன்னுத்துரை சிவபாலன் (உயிரியல் - 2 ஆம் நிலை)


சபாநாதன் தனேசன் (கணிதம் - 5 ஆம் நிலை)


சிவப்பிரகாசம் மயூரன் (கணிதம் - 1 ஆம் நிலை)

இவர்களை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கம் சுவிஸ் கிளை பெருமகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றது.

இந்த மாணவர்களுக்கான கௌரவிப்பும், பணப்பரிசில் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 28.09.2005 ஆம் திகதி யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.மத்தியகல்லூரி பழையமாணவர் சங்கம் - சுவிற்சர்லாந்து

J.C.C Ex Schuler Swiss,
Post Fach 102,
4716 Welchenrohr,
Switzerland.

Tel : 0041 78 890 27 84
E - Mail : j-c-c-exstudent-swiss@hotmail.com

"மத்தியின் மணிக்கொடி என்றும் தாழ்வு பெறாது" [C/4673]





டிஜிற்றல் போட்டோ கொப்பி
A4 - கறுப்பு வெள்ளை - 3.00 ரூபா
A4 - கலர் - 40.00 ரூபா
(சி/4609)
ஸ்ரீ மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லப்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# பக்கச்சார்பற்ற செய்திகளை வெளியிடுவதற்கு தகுதிவாய்ந்த குழுவொன்றை நியமிக்கவும்!

## சுதந்திரக் கட்சி தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை



கொழும்பு

பக்கச்சார்பற்ற வகையில் தனியார் ஊடகங்கள் செய்திகளை வெளியிடுவதற்குத் தகுதி வாய்ந்த அதிகாரிகள் குழுவொன்றை நியமிக்கவேண்டுமென, சிறிலங்கா சுதந்திரக் கட்சி- தேர்தல் ஆணையாளரைக் கோரியுள்ளது.

தனியார் ஊடகங்கள் பக்கச்சார்பற்ற வகையில் செய்திகளை வெளியிடுவதாகக் கூறினாலும்- அதில் எந்தவித உண்மையுமில்லை. இந்த ஊடகங்கள் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியுடன் நெருங்கிய உறவை வைத்துள்ளன என - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கையின் பேச்சாளர் அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது -

பிரதமர் மகிந்தவின் ஜனாதிபதித் தேர்தல் பிரதம இணைப்பதிகாரியாக நான் பணியாற்றுகிறேன்.

தேர்தல் ஆணையாளரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் பிரதமரின் தேர்தல் கால ஊடகப் பேச்சாளர் என்ற வகையில் நானும் சந்திக்கவுள்ளேன்.

அரசியலமைப்பின் 17 ஆவது சரத்தின்படி தேர்தல் ஆணையாளர் தனியார் ஊடகங்களைக் கண்காணிக்க அதிகாரிகள் குழுவொன்றை அமைக்கலாம். பல தனியார் ஊடகங்கள் பக்கச்சார்பான வகையிலேயே தகவல்களை வெளியிடுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அடுத்த மாதம் 10 ஆம் திகதியே புறூவ் ஹொவ்டே வருவார்!



கொழும்பு

விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையில் போர்நிறுத்தம் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு, நோர்வேயின் முன்னாள் படைத் தளபதி ட்ரொன் புறூவ் ஹொவ்டே அடுத்த மாதம் 10 ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக - கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தின் பெண் பேச்சாளர் ஜேர்ஸ்ரி றொம்ஸ்டால் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இவரின் வருகைக்கான திகதி இனிமேல்தான் உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்புவரும் புறூவ் ஹொவ்டே, தற்போதைய பாதுகாப்பு நிலவரம் தொடர்பாகவும், போர் நிறுத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பாகவும், அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவாரென, நோர்வே வெளிவிவகார அமைச்சு முன்னர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸ் செல்ல முயன்ற 12 தமிழர்கள் கைது!

கொழும்பு

போலி ஆவணங்களைத் தயாரித்து சட்டவிரோதமாக பிரான்ஸ் செல்லவிருந்த 5 பெண்கள் உட்பட 12 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட அனைவரும் தமிழர்கள் எனத் தெரியவருகிறது.

12 மாலைதீவு நாட்டவர்களின் கடவுச்சீட்டுக்கள் உட்பட ஆவணங்களைத் திருத்தி, அதன்மூலம் 12 இலங்கையர்களும் பிரான்ஸ் நோக்கிப் பயணமாகத் திட்டமிட்டிருந்தனர்.

இதற்கு உடந்தையாக இருந்த விமான நிலைய பாதுகாப்புப் பிரிவு உறுப்பினர்கள் சிலரைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# சிறைச்சாலை வாகனம் மீது சூடு நான்கு பேர் பலி: 4 பேர் காயம்!

கொழும்பு

கம்பஹா நீதிமன்றத்துக்குக் கைதிகளை அழைத்துச்சென்ற பஸ்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் நால்வர் உயிரிழந்தனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து கம்பஹா நீதிமன்றத்துக்குக் கைதிகளை நேற்றுமுன்தினம் காலை 9.50 மணியளவில் அழைத்துச் சென்றபோது கம்பஹா அத்தனகல ஓயா பாலத்துக்கருகில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது பஸ்ஸில் இருந்த கைதி ஒருவரும், 3 சிறைச்சாலை அதிகாரிகளும் உயிரிழந்தனர்.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதையடுத்து பஸ் சாரதி வாகனத்தை நிறுத்தாது தொடர்ந்து ஓட்டிக்கொண்டிருந்தபோதும் - அந்த பஸ்ஸை விரட்டிச்சென்று துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

கம்பஹா ரயில் கடவையை அண்மிக்கையில், பின்னால் வந்த வாகனம் மினுவன்கொட பகுதிக்குத் திரும்பிச்சென்றது.

பஸ் சாரதி வாகனத்தை நேராக கம்பஹா வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றார்.

சம்பவத்தில் உயிரிழந்த கைதி பல கொலைச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர் எனத் தெரியவந்துள்ளது. காயமடைந்த நால்வரும் கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்தப் பஸ்ஸில் ஹசித எனும் பாதாள உலகக் குழுத் தலைவர் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கைதிகளின் பாதுகாப்பைக் கவனிக்க பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படுவார்!

கொழும்பு

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் பாதுகாப்புத் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் கவனிப்பதற்கென பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

சிறைகளிலும், வெளியிலும் கைதிகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தலைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக நீதியமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பாதுகாப்புத் திட்டங்களில் குறைபாடுகள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போதைப்பொருட்களை வைத்திருத்தல், கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தல் என்பன சிறைச்சாலைகளில் தடை செய்யப்பட்டுள்ளன.

எனினும் சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு இந்த நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும், அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சிறைச்சாலைகளின் பாதுகாப்புக்கு என நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபரை நியமிப்பதற்கான அமைச்சரவை அனுமதி பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலை கைதிகள் சென்ற பஸ்மீது நேற்றுமுன்தினம் மினுவங்கொட பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் - மூன்று சிறைக் காவலர்களும் ஒரு கைதியும் உயிரிழந்தனர். இதனையடுத்தே அமைச்சரால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (01)

# தேர்தலின்போது கிராம அலுவலர்கள் பக்கச்சார்பின்றி கடமையாற்றவேண்டும்



கொழும்பு

ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் கிராம அலுவலர்கள் பக்கச்சார்பின்றிச் செயற்படவேண்டும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது -

தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளோருடன் கிராம அலுவலர்கள் இணைந்து கடமையாற்றவேண்டும். வாக்குச் சாவடிகளை அடையாளம் காணுதல், வாக்களிப்பின்போது சந்தேகத்துக்கிடமானவர்களைக் கண்டுபிடித்தல் மற்றும் தேர்தல் பணியாளர்களின் தேவைகளை அறிந்துகொள்ளல் என்பன கிராம அலுவலர்களுக்கு உள்ள கடமைகள் என்றும் - அவர்கள் முழுமையாகப் பக்கச்சார்பின்றிக் கடமையாற்றவேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார். (01)

# முஸ்லிம் சமாதான செயலகத்துக்கு நோர்வே அரசு நிதியுதவி!

கொழும்பு

முஸ்லிம் சமாதான செயலகத்துக்கு 23.9 மில்லியன் ரூபா நிதியுதவி அளிப்பதாக நோர்வே அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நோர்வே தூதரகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் -

யுத்தநிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் மற்றும் எதிர்கால அமைதிப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் கருத்துகளை ஒருங்கிணைத்து, வெளிப்படுத்தும் வகையில் இந்தச் சமாதானச் செயலகம் செயற்படும்.

இந்தச் செயலகம் அமைப்பதில் நோர்வே அரசு மகிழ்ச்சியடைகிறது. முஸ்லிம்களுக்கான மீளமைப்புப் பணிகள் தொடர்பான தரவுகளை இந்தச் செயலகம் உருவாக்கி வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதிப் பேச்சுக்களில் தங்களை மூன்றாம் தரப்பாகப் பங்கேற்க அனுமதிக்க முஸ்லிம்கள் கோரிவருகின்றனர். இந்தக் கோரிக்கைதான் சுனாமி பொதுக் கட்டமைப்பிலும் எதிரொலித்தது. இந்த நிலையில் முஸ்லிம்களுக்கான சமாதானச் செயலகம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)



சுவிஸ் - லுசேர்ன் மாநகரத்தில் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட - குமரப்பா, புலேந்திரன், தியாகி திலீபன், மாலதி, கேணல் சங்கர், லெப்.கேணல். நாதன், கப்டன் கஜன் உட்பட 17 மாவீரர்களினதும் நினைவெழுச்சி மற்றும் போரும் சமாதானமும் நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் நூலை ஒருவர் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

# தேர்தலில் வன்முறைகள் ஏற்படாது தடுக்க சர்வதேசம் அழுத்தம் கொடுக்கவேண்டும்!

வொஷிங்ரன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும், நீதியாகவும் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தமது வன்முறைகளை நிறுத்துவதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்கவேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா - நோர்வே பிரதமர் பொன்டவிக்கிடம் கோரியுள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ.நா.சபையின் கூட்டத்தின் போதே ஜனாதிபதி சந்திரிகா - நோர்வே பிரதமரிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவால் விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோளை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு தெரிவிப்பதற்கு நோர்வே உடன்பட்டுள்ளது.

அத்துடன் இது குறித்து நோர்வே பிரதிநிதிகள் கிளிநொச்சிக்குச் சென்று, விடுதலைப் புலிகளுடன் பேசவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (தே)

## தொழில் வாய்ப்புக்காக

# வெளிநாடு செல்லும் தாய்மார்களின் பிள்ளைகள்மீது பாலியல் துஷ்பிரயோகம்

கொழும்பு

இலங்கையில் தாயார் வெளிநாடு செல்ல தனியாய் விடப்படும் குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கும், கொடுமைக்கும் ஆளாகிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறார் பாலியல் துஷ்பிரயோக அவலநிலை குறித்து சர்வதேச ஊடக செய்தியாளர் டுமீதா லூத்ரா இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்-

இவ்வாறு தனியாக விடப்படும் சிலர் சிறுமியாய் இருக்கும்போதே கர்ப்பம் தரித்து, குழந்தை பெற்றுக் கஷ்டப்படுகிறார்கள். அத்துடன் தனது தந்தையே தனது பிள்ளைக்கும் தந்தையாகும் அவலநிலையெல்லாம் சிறுமிகளுக்கு ஏற்பட்டு வருவதாகவும் -

கன்னித்தன்மையையும், குழந்தைப் பருவத்தையும் பறிகொடுக்கும் இந்தச் சிறுமிகளுக்கு ஒரு பக்கம் நீதி மறுக்கப்படுகிறது. மறுபக்கம் இவர்கள் சமுதாயத்தால் ஒதுக்கப்படுகிறார்கள் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஆறு லட்சம் பெண்கள் வீட்டுவேலை செய்து வருமானத்தை ஈட்டுவதற்காக வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள்.

கோடிக்கணக்கான டொலர்களை அந்நியச் செலாவணியாக நாட்டுக்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் பிரதான வர்த்தகமாகவும் விளங்குகிறது.

எனினும் இந்த நிலை தொடரும்போது இலங்கையின் குடும்ப அமைப்பின் தன்மையை இது அடிப்படையில் மாற்றிவிடும் ஆபத்தை உருவாக்கியுள்ளதாகவும் அந்த சர்வதேச ஊடகவியலாளர் எச்சரித்துள்ளார். (01)

## சுப்பர் சீரிஸ் தொடர்

# உலக லெவன் அணி வாய்ப்பை இன்சமாம் உல்-ஹக் நிராகரிப்பு!



லாகூர்

அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள சுப்பர் சீரிஸ் தொடரில் டெண்டுல்கருக்குப் பதிலாக உலக லெவன் அணியில் சேர்க்கப்பட்ட பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம், தான் இந்தப் போட்டியில் பங்கேற்கமாட்டேன் என அறிவித்துள்ளார்.

அடுத்தமாதம் 5ஆம் திகதி முதல் அவுஸ்ரேலியாவில் உலக லெவன் அணிக்கும், அவுஸ்ரேலிய அணிக்குமிடையே 6 நாட்களைக் கொண்ட டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் நடைபெறவுள்ளது.

இதில் உலக லெவன் அணியில் ஒருநாள் போட்டிக்கு தென்னாபிரிக்க வீரர் பொலக்கும், டெஸ்ட் அணிக்கு சிமித்தும் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இரு அணியிலுமே பாகிஸ்தான் கப்டன் இன்சமாமின் பெயர் இடம்பெறாமல் இருந்தது. இதனால், அவர் தெரிவுக் குழுவினரை கடுமையாக விமர்சித்தார். அந்த நாட்டு கிரிக்கெட் சபையும் அவருக்கு ஆதரவு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான டெண்டுல்கர் காயம் காரணமாக சூப்பர் சீரிஸ் தொடரிலிருந்து விலகினார். இதனால் அவருக்குப் பதிலாக டெஸ்ட் போட்டிக்கான அணியில் இன்சமாம் சேர்க்கப்பட்டார். ஒருநாள் போட்டிக்கான அணியில் ராவிட்டும், மேற்கிந்தியத் தீவுகள் வீரர் கெய்லும் சமீபத்தில் சேர்க்கப்பட்டனர்.

இதனால் கோபமடைந்த இன்சமாம், அவுஸ்ரேலியாவில் நடைபெறும் ஐ.சி.சி விருது வழங்கும் விழாவிலும், கப்டன்களின் ஆலோசனைக் கூட்டத்திலும் பங்கேற்க மாட்டேன் எனக் கூறினார்.

இது தொடர்பாக இன்சமாம் கூறியதாவது -

சுப்பர் சீரிஸ் தொடரில் நான் எப்படி தெரிவானேன் என்பது தெரியும். ஒரு வீரர் ஆடவில்லை என்பதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளேன். முதலில் நான் பொருத்தமானவனாக தெரிவு செய்யப்படவில்லை. ஒரு போட்டியில் ஆட மட்டும் அவுஸ்ரேலியா செல்ல மாட்டேன். நான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். இதனால் சுப்பர் சீரிஸ் தொடரில் விளையாடமாட்டேன்.


ஆசிய - ஆபிரிக்க கிரிக்கெட் போட்டியில் நல்ல மதிப்பு இருந்தது. அதனால், அந்தப் போட்டியில் பங்கேற்றேன். சுப்பர் சீரிஸ் தொடரில் பங்கேற்காதது குறித்து கிரிக்கெட் சபைக்கு இன்னும் தெரியப்படுத்தவில்லை. அதற்கான அவசியமும் இல்லை. இது தொடர்பாக அவர்கள் என்னிடம் தொடர்பு கொள்ளவில்லையென இன்சமாம் மேலும் குறிப்பிட்டார்.




கப்டன் கங்கூலியை அணியிலிருந்து நீக்கக் கோரி பெங்களூரில் நடந்த கிரிக்கெட் ரசிகர்களின் ஆர்ப்பாட்டம். முன்னே நிற்கும் ஒரு பெரிய மனிதரை கவனித்தீர்களா. இவருக்குக்கூடவா கங்கூலியைப் பிடிக்கவில்லை.

# விளையாட்டு

# கங்கூலி - சப்பல் இருவரிடையே புயலைக் கிளப்பிய உரையாடல்!



புலவாயோ

புலவாயோ டெஸ்ட் போட்டிக்கு முன்னைய நாள் நடந்த பேச்சுவார்த்தையே, சௌரவ் கங்கூலி - கிரேக் சப்பல் இடையே இவ்வளவு பெரிய பிளவு ஏற்படக் காரணமாகும். அந்த சூடான உரையாடல் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. அதன் விபரம் -

சப்பல் : ஒருநாள் தொடரில் மொகமட் கைவ், யுவராஜ் சிங் இருவரும் அருமையாக விளையாடினார்கள். இந்த டெஸ்ட் போட்டியிலும் அவர்களை அணியில் சேர்க்கலாம்.

கங்கூலி : அவர்களுக்குப் பதில் யாரை அணியில் இருந்து நீக்குவது?


சப்பல் : ஷேவாக், கம்பீர், லக்ஸ்மன், ராகுல் ராவிட்... இவர்கள் கட்டாயம் அணியில் இருக்கவேண்டும்.

கங்கூலி : கப்டன் என்ற முறையில், அணியில் நான் இருக்கவேண்டுமென்று நினைக்கிறீர்களா?

சப்பல் : கப்டனாக இந்தப் போட்டியில் களமிறங்கக்கூடிய அளவுக்கு சரியான, தெளிவான மனநிலையில் நீங்கள் இல்லை என்றுதான் நினைக்கிறேன்.

கங்கூலி : அப்படியானால், கப்டன் பதவியிலிருந்து நான் விலகிக் கொள்ளவேண்டும் என்று சொல்கிறீர்களா?

சப்பல் : அதை நீங்கள்தான் முடிவு செய்யவேண்டும். எனது கையில் ஒன்றுமில்லை. ஆனால், அப்படியொரு முடிவு நீங்கள் எடுக்கிறீர்கள் என்றால்... அதுதான் சரியான முடிவாக இருக்கும்.



இந்த உரையாடல்தான் இந்திய அணிக்குள் பெரும் புயலைக் கிளப்பி விட்டிருக்கிறது.

## தொழில்சார் கிரிக்கெட் வீரர் சங்கத்தின்


# இந்த வருடத்தின் சிறந்த வீரராக அன்ட்ரூ பிளின்ரொப் தெரிவானார்



லண்டன்

நட்வெஸ்ட் தொழில்சார் கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் இந்த ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் விருது இங்கிலாந்து வீரர் அன்ட்ரூ பிளின்ரொப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

றோயல் அல்பேட் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற



தொழில்சார் கிரிக்கெட் வீரர்கள் சங்க இராப் போசன விருந்திலேயே இவ்வருட விருதுகள் அறிவிக்கப்பட்டன.

ஆஷஸ் தொடர் நாயகனான பிளின்ரொப்புக்கு இந்த வருடத்தின் சிறந்த வீரர் விருதும் வழங்கப்பட்டது.



கடந்தமாதம் கிரிக்கெட் எழுத்தாளர் கழகத்தில் விருதைவென்ற எசெக்ஸ் அணி துடுப்பாட்ட வீரர் அலைஸ்ரெயர்குக் (வயது 20) இந்த வருடத்தின் சிறந்த இளம் வீரராகவும்,

கடந்த 25 வருட கால இங்கிலாந்தின் சிறந்த கிரிக்கெட் வீரராக இயன் பொத்தமும் தெரிவு செய்யப்பட்டனர்.

25 வருட காலம் பணியாற்றி ஓய்வு பெற்ற நடுவர் டேவிட் ஷெப்பேர்ட்டுக்கு விசேட விருதும் வழங்கப்பட்டது.

# தென்னாபிரிக்க தொடரிலிருந்து கிறிஸ் கெய்ன்ஸ் நீக்கப்பட்டார்!



வெலிங்டன்

தென்னாபிரிக்க தொடருக்கான நியூஸிலாந்து அணியிலிருந்து சிரேஷ்ட வீரர் கிறிஸ் கெய்ன்ஸ் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பிராங்ளின் சேர்க்கப்பட்டுள்ளார்.

அடுத்தமாதம் 23ஆம் திகதி தென்னாபிரிக்கா செல்லும் நியூஸிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

சமீபகாலமாக காயத்தால் அவதிப்படும் சகலதுறை வீரர் கெய்ன்ஸ் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். 35 வயதான இவர், ஏற்கனவே டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். ஒருநாள் போட்டிகளில் மட்டும் பங்கேற்றுவந்த இவருக்கு காயம் வினையாக அமைந்தது. சமீபத்திய சிம்பாப்வே முத்தரப்பு தொடரில்கூட அனைத்து போட்டிகளிலும் விளையாடவில்லை.

தனக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது குறித்து அதிருப்தி தெரிவித்த கெய்ன்ஸ், எனது கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளது. இப்போதைக்கு ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறும் உத்தேசம் இல்லை. மீண்டும் அணியில் இடம்பிடிக்க போதிய கால அவகாசம் உள்ளது என்றார்.

சிம்பாப்வே தொடரில் அறிமுகமான ஜிதேன் பட்டேலுக்கு மீண்டும் வாய்ப்புத் தரப்பட்டுள்ளது.

ஒருநாள் தொடருக்கான நியூஸிலாந்து அணி வருமாறு :

ஸ்ரீபன் பிளெமிங் (கப்டன்), அஸ்ரில், ஹமிஸ் மார்ஷல், ஜேம்ஸ் மார்ஷல், கிரேக் மக்மிலன், லூ வின்சென்ட், ஸ்கொட் ஸ்ரைரிஸ், ஜேக்கப் ஓரம், பிரன்டன் மக்கலம், விற்றோரி, ஜேம்ஸ் பிராங்ளின், கைல் மில்ஸ், அன்ட்ரூ அடம்ஸ், ஷேன் பொண்ட், ஜிதேன் பட்டேல்.




சௌரவ் கங்கூலி தொடர்ந்து கப்டனாக அணியில் நீடிக்கவேண்டும், பயிற்சியாளர் பதவியிலிருந்து சப்பலை நீக்கவேண்டும் என்று சமீபத்தில் கங்கூலியின் சொந்த ஊரான கொல்கத்தாவில் ஆர்ப்பாட்டம் செய்த ரசிகர்கள்.

# யாழ்.மாவட்ட பாடசாலை மட்டத்திலான ஸ்கிறபிள் சுற்றுப்போட்டி முடிவுகள்!

யாழ்ப்பாணம்

யாழ். இந்துக் கல்லூரி ஸ்கிறபிள் (Scrabble) கழகம், சிறிலங்கா ஸ்கிறபிள் லீக்குடன் இணைந்து நடத்திய யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான இரண்டாவது வருடாந்த ஸ்கிறபிள் சுற்றுப்போட்டி கடந்த 17ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களான வி.மயூரன் இரண்டாவது தடவையாகவும், யாழ்.மாவட்ட பாடசாலைகளின் சிறந்த ஸ்கிறபிள் வீரர் விருதையும், அ.அல்பேட் நிமலன் மேற்பிரிவில் முதலாமிடத்தையும், க.விக்னன் இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

கீழ்ப்பிரிவில் யாழ்.இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பா.சேதரன் முதலிடத்தையும், வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.கௌசா இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இதில் பங்குபற்றிய பாடசாலைகளின் சிறந்த ஸ்கிறபிள் வீரர்களாக ஜெ.ரி. கரன்சாந்தறூபன் (பத்திரிசியார் கல்லூரி), ஜி.விஸ்ணுபிரியா (யாழ்ப்பாணக் கல்லூரி), ஏ.நிதர்சன் (கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி), யு.சுகிர்தா (விக்ரோறியாக் கல்லூரி) மற்றும் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.ஜானுயா ஆகியோர் தெரிவாகினர்.

## அஸ்ரா கிண்ண கிரிக்கெட்டின் இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்

18 வயதுக்குட்பட்டோருக்கான அஸ்ரா கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று 'ஏ' பிரிவில் - யூனியன் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், மகாஜனக் கல்லூரியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரியும்,

'பி' பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரியும், யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து விக்னேஸ்வராக் கல்லூரியும்,

'சி' பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும், சென். பற்றிக்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன. (12)

1. சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை.
2. நாடாளுமன்ற அரசாங்கமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை
3. நிர்வாகக் குழு முறைமை புகுத்தப்பட்டமை.
4. பிரதேச வாரி பிரதிநிதித்துவ முறை பகுக்கப்பட்டமை.

21. வெளிநாட்டவரான போர்த்துக்கேயர் கோட்டை இராட்சியத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு உதவிய பயனுறுதி வாய்ந்த காரணி -
1. இலங்கையானது பல இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தமை காரணமாக நிலவிய ஒற்றுமையின்மை.
2. படைகளை வழிநடத்திச் செல்வதில் இளவரசர் பலவீனராக இருந்தமை.
3. காலத்துக்கு ஒவ்வாத படைக்கலங்களை இந்நாட்டு மக்கள் வைத்திருந்தமை.
4. கிறிஸ்தவர்களாவதில் மக்கள் காட்டிய ஆர்வம்.

22. தற்போதைய இலங்கை அரசியல் யாப்புக்கு இணங்க அமைச்சரவை சம்பந்தமான பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?
1. ஜனாதிபதியே அமைச்சரவையின் தலைவர் ஆவார்.
2. எல்லா அமைச்சர்களும் அமைச்சரவையில் இடம்பெறுவர்.
3. மாகாண முதலமைச்சர்கள் யாவரும் அமைச்சரவையில் இடம்பெறுவர்.
4. அமைச்சரவைக்கு அமைச்சர்களை நியமிப்பது பிரதம அமைச்சரேயாவார்.

23. பின்வருவனவற்றில் பெருமளவுக்கு சூழலை மாசடையச் செய்யாத சக்திப்பொருட்தொகுதி யாது?
1. சூரிய சக்தியும், நீர் மின்சாரமும்.
2. நீர் மின்சாரமும், கனிய எண்ணெயும்.
3. அணுசக்தியும், இயற்கை வாயுவும்.
4. நிலக்கரியும், கனிய எண்ணெயும்.

24. ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் கிடைக்கும் நிலம் குறைந்து செல்லும்போது, எடுக்கவேண்டிய பின்வரும் புத்திசாலித்தனமான நடவடிக்கைகளில் பொருத்தமற்றது யாது?
1. ஏற்கனவே பயிர் செய்யப்படும் நிலத்திலிருந்து அதிக விளைச்சலைப் பெறுதல்.
2. புதிய நிலங்களைப் பயிர்ச் செய்கைக்குக் கொண்டுவருதல்.
3. அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதைகளைப் பயன்படுத்துதல்.
4. சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல்.

25. சட்டத்துக்கு மாறாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவரை நீதிமன்றத்துக்குக் கொண்டுவரும்படி கோருவதற்கு பின்வருவனவற்றுள் எதனைப் பயன்படுத்தலாம்.
1. தற்காலிகக் கட்டளை.
2. ஜனாதிபதியின் விதிப்பு.
3. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை.
4. ஆட்கொணர் சட்டம்.

26. பின்வருவனவற்றுள் ஜனநாயக ரீதியான தொழிற்பாடாக எதனைக் குறிப்பிடலாம்.
1. ஒருவர் தனது எதிரிகளைக் கடுமையாகக் கண்டனம் செய்வது.
2. ஆக்கபூர்வமான கண்டனமும், எதிர்மாறான கருத்துகளைச் சகிக்கும் தன்மையும்.
3. ஒருவர் தனது அபிப்பிராயங்களை பொதுமக்களிடையே பகிரங்கப்படுத்துவது.
4. தமது எதிரிகள் கருத்துகளை வெளிப்படுத்தும் மார்க்கங்களைத் தடைசெய்வது.

27. பின்வரும் கூற்றுக்களில் நிலைக்கக்கூடிய அபிவிருத்தி என்ற எண்ணக்கருவை விளக்குவது யாது?
1. மக்கள் தேவையைக் கவனத்துக்கு எடுத்து, அதிகளவில் உற்பத்தி செய்தல்.
2. மனித உழைப்புக்கு முக்கியத்துவம், இயந்திரசாதனங்களை மிகக் குறைந்தளவில் பயன்படுத்துதல்.
3. சூழலையும், எதிர்காலத்தையும் கவனத்துக்கு எடுத்து, நாட்டின் வளங்களைக் கவனமாகப் பயன்படுத்துதல்.
4. அபிவிருத்தியடைந்த நாடுகள்போல தொழில்நுட்பங்களையும், தொழில் நுணுக்கங்களையும் பயன்படுத்துதல்.

28. பின்வரும் எந்தச் சந்தர்ப்பங்களில் இலங்கை மக்கள் எல்லோரும் ஒரு தேர்தல் தொகுதியின் வாக்காளர்களாகச் செயற்படுவர் என்பதைக் குறிக்கும் விடையைத் தெரிவுசெய்க?
A. நாடாளுமன்றத் தேர்தலின்போது,
B. மாகாண சபைத்தேர்தலின்போது,
C. ஜனாதிபதித் தேர்தலின்போது,
D. குடியொப்பத்தை மேற்கொள்ளும்போது,
1. AB 2. BC 3. CD 4. DA

29. பிரித்தானியர் ஆட்சியில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைப் பரம்பலின் விளைவாக மலைநாட்டு மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளில் முக்கியமானதை பின்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க.
1. தன்னிறைவுடைய பொருளாதாரம் அழிந்தமை.
2. காணிப்பற்றாக்குறை உக்கிரமடைந்தமை.
3. பெருந்தோட்டப் பயிர்களுக்காகக் காடுகள் அழிக்கப்பட்டமையால் மண்ணரிப்பு அபாயம் ஏற்பட்டமை.
4. வெளிநாட்டவரின் பெருந்தோட்டங்களில் தொழிலாளர் குறைந்த கூலிக்கு வேலை செய்யும் நிலைமை ஏற்பட்டமை.

30. பின்வரும் எந்தச் சந்தர்ப்பங்களில் இலங்கை மக்கள் பட்டியல்முறையினிலூ வாக்களிப்பர் என்பதைக் குறிக்கும் விடையைத் தெரிவுசெய்க.
A. நாடாளுமன்றத் தேர்தலின்போது,
B. மாகாணசபைத் தேர்தலின்போது,
C. ஜனாதிபதித் தேர்தலின்போது,
D. குடியொப்பத்தை மேற்கொள்ளும்போது,
1. AB 2. BC 3. CD 4. DA

31. கீழ்வரும் விடயங்களில் ஜனநாயக ஆட்சிமுறை ஒன்றுக்கு அத்தியாவசியமான இட்சணம் எது?
1. நிறைவேற்று அதிகாரத்துடனான ஜனாதிபதி ஒருவர் இருத்தல்.
2. மந்திரிசபையின் கூட்டுப் பொறுப்பு நிலவுதல்.
3. அரசியல்கட்சிகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருத்தல்.
4. அபிப்பிராயத்தை வெளிப்படுத்தக்கூடிய தேர்தல் முறைமிருத்தல்.

32. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்பாக தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தும்போது, சிறந்த பயனளிக்கக்கூடியது பின்வருவனவற்றுள் எது?
1. உற்பத்திச்செலவை முடியுமானவரை குறைப்பதற்கு மனித உழைப்பைக் குறைவாகக்கொண்ட தொழில்நுட்பவியல் முறைகளைப் பயன்படுத்துதல்.
2. அந்நிய நாடுகளில் முற்காலந்தொட்டு நடைமுறையிலுள்ள தொழில்நுட்பவியல் முறைகளை விருத்தி செய்து பயன்படுத்துதல்.
3. தொழில்நுட்பவியல் முறைகளை அந்தந்த நாடுகளின் பொருளாதார சமூக நிலைமைகளுக்குப் பொருந்தும் வகையில் மாற்றியமைத்துப் பயன்படுத்துதல்.
4. உச்ச அளவு இலாபத்தைப் பெற, நவீன தொழில்நுட்பவியல் முறைகளை உற்பத்திச் செயற்பாடுகளில் பயன்படுத்துதல்.

(தொடரும்...)

திரு.ட.ஸ்ரனி







மாணவர் மலர்

# கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சை -2005
## மாதிரி வினாத்தாள் -

## வர்த்தகமும் கணக்கியலும்

### பகுதி I

சரியான விடையைத் தெரிவு செய்க

01. போக்குவரத்தின் ஒரு கூறாக அமையாதது?
1. பாதை 3. சக்தி வலு
2. பாதுகாப்பு 4. சாதனம்

02. பந்தித்த பண்டகசாலை எவற்றுக்குப் பயன்மிகுந்தவை யாகும்.
1. நுகர்வோர் 3. உற்பத்தியாளர்கள்
2. மொத்தவிற்பனையாளர்கள் 4. இறக்குமதியாளர்கள்

03. இலாபத்தைப் பொறுத்து பணிப்பாளர்கள் பங்கிலாப வீதத்தை முன் மொழிகின்ற பங்குகளின் வகைக்கு வழங்கும் பெயர்
1. உபகாரப் பங்கு 3. சாதாரண பங்கு
2. முன்னுரிமைப் பங்கு 4. முகாமைப்பங்கு

04. பொருட்களின் உரிமை, தவணைக் கொடுப்பனவுகள் அனைத்தும், செலுத்தி முடிக்கப்படும் வரைக்கும் விற்பனையாளருடையதாகவே அமையும் விற்பனை முறை யாது?
1. கடன் விற்பனை முறை
2. தவணைக் கொடுப்பனவு முறை
3. பிற்போடப்பட்ட கொடுப்பனவு முறை
4. வாடகைக் கொள்வனவு முறை

05. குறுக்குக் கோடிட்ட காசோலைக்குப் பொருத்தமான சரியான கூற்றைத் தெரிவுசெய்க?
1. இது நடைமுறைக் கணக்கொன்றில் வைப்பிலிடப்பட வேண்டிய ஆவணம்.
2. இது கைமாறத்தகாதது.
3. இது ஒரு கட்டளைக் காசோலையாகும்.
4. இது ஒரு காவியின் காசோலையாகும்.

06. வரையறுத்த பொதுக்கம்பனியொன்றில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டிருப்பவர்?
1. சாதாரண பங்குதாரர்
2. முன்னுரிமைப் பங்குதாரர்
3. தொகுதிக் கடன்காரர்
4. மேற்கூறிய அனைவரும்

07. ஒரு கம்பனியின் தேறிய வருமானத்திலிருந்து பங்குதாரர்களைப் பகிரப்படும் பாகத்துக்கு வழங்கும் பெயர்?
1. இலாபங்கள் 3. நன்மைகள்
2. பங்கிலாபங்கள் 4. உபகாரப்பணம்

08. பங்குச் சந்தைக் கருமங்களை ஒழுங்குபடுத்தவும், கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட அமைப்பு
1. கொழும்பு பங்கு பரிவர்த்தனை
2. மத்திய வைப்பக முறை
3. ஆவண பரிமாற்று ஆணைக்குழு
4. ஜோன் கீல் பங்குத்தரகர் கம்பனி

09. முயற்சியாளருக்கு ஆலோசனை சேவையை மட்டும் வழங்கும் நோக்குடன் தாபிக்கப்பட்டுள்ள நிலையம்
1. மத்திய வங்கி 3. வியாபார வங்கி
2. வர்த்தக வங்கி 4. சேமிப்பு வங்கி

10. ரூபா 10000 எனும் தொகைக்கான கொள்வனவுப் பட்டியல் இரு தடவைகள் பதியப்பட்டது. இவ்வழுவானது
1. விடுபட்ட வழு 3. இரட்டிப்பு வழு
2. ஈடு செய்யும் வழு 4. கோட்பாட்டு வழு

11. விற்ற சரக்கின் கிரயத்தை (விற்பனைக்கிரயம்) தரும் தொகுதியைத் தெரிவு செய்க?
1. ஆரம்பத்தொக்கு+ கொள்வனவு - இறுதித்தொக்கு
2. ஆரம்பத்தொக்கு+இறுதித்தொக்கு - ஆரம்பத்தொக்கு
3. விற்பனை + ஆரம்பத்தொக்கு - இறுதித்தொக்கு
4. ஆரம்பத்தொக்கு+கொள்வனவு - இறுதித்தொக்கு

12. உற்பத்திக் கணக்கொன்றில் முதற்கிரயம் எதிலிருந்து தயாரிக்கப்படும்.
1. மூலப்பொருள், உற்பத்திக்கிரயம், மேந்தலை
2. நேர்க்கிரயம், மேந்தலை, உற்பத்திக்கிரயம்
3. நேர்க்கிரயம், நேர் உழைப்புக்கிரயம், நேர் மூலப்பொருள்கிரயம்
4. நேர் உழைப்புக் கிரயம், நேரில் கிரயம், மூலப்பொருள் கிரயம்

13. வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிப்பதற்கு அவசியமானது
1. காசேட்டின் காசு நிரலும், வங்கி நிரலும்
2. காசேட்டின் வங்கி நிரலும், வங்கிக் கூற்றும்
3. காசேட்டின் வங்கி, காசுக் கழிவு நிரல்கள்
4. காசேட்டின் காசு நிரலும், வங்கிக்கூற்றும்

14. ரவி என்ற கடன்பட்டோனடம் பெற்ற ரூபா 2500 எனும் தொகையை அவரது கணக்கில் வரவில் பதிந்த வழுவினைத் திருத்துவதற்குத் தேவையான பதிவு
1. ரவி கணக்கு வரவு ரூபா 2500 காசுக் கணக்கு செலவு ரூபா 2500
2. காசுக்கணக்கு வரவு ரூபா 2500 ரவி கணக்கு செலவு ரூபா 2500
3. ரவி கணக்கு வரவு ரூபா 5000 தொங்கற் கணக்கு செலவு ரூபா 5000
4. தொங்கற்கணக்கு வரவு ரூபா 5000 ரவி கணக்கு செலவு ரூபா 5000

15. காசோலை மூலம் கொடுப்பனவொன்று செய்யப்படும் பொழுது அதற்காகச் சான்றாக வைத்திருக்கும் ஆவணம்?
1. அடியிதழ் 2. உறுதிச்சீட்டு
3. வரவுத்தாள் 4. பற்றுச்சீட்டு

16. காசுக் கழிவீடு அனுமதிக்கப்படுவது
1. காசுக்கொள்வனவுகளுக்கு
2. விற்பனைகளை அதிகரிக்கச் செய்வதற்கு
3. கடன் கொள்வனவுகளுக்கு
4. கடன் கொடுப்பனவை செய்ய ஊக்கப்படுத்துவதற்கு

17. விற்பனை விநியோகச் செலவுகளைக் கொண்டுள்ள கணக்குகளின் தொகுதி
1. வாடகை, இறைவரி, காப்புறுதி
2. வங்கிக் கடன் வட்டி, வங்கிக்கட்டணம், அறவிட முடியாக்கடன்

3. அறவிட முடியாக்கடன், அனுமதித்த கழிவு, வெளிச்சுமைகூலி
4. உட்சுமைக்கூலி, சுங்கத்தீர்வை, கூலி

18. வாங்குபவரிடமும், விற்பவரிடமும் தரகினைப் பெற்றுக்கொள்ளும் முகவர்
1. தரகர் 2. தரகு முகவர்
3. ஏலம் கூறுபவர் 4. அனுப்பு முகவர்

19. வியாபாரத்தின் நிலையான சொத்து ஒன்றினைக் கடனுக்கு விற்கும் பொழுது, அது பதியப்பட வேண்டிய முதன்மை ஏடு
1. விற்பனை நாளேடு 2. பேரேடு
3. காசேடு 4. பொதுத்தினசேரி

20. ஒரு வியாபார நிறுவனத்தின் நிதி நிலைமையைக் காட்டுவது
1. வியாபாரக் கணக்கு 2. இலாபநட்டக் கணக்கு
3. ஐந்தொகை 4. பரீட்சை மீதி

# பகுதி II

01.
1. நுகர்வுப்பொருட்களின் நான்கு வகைகளைத் தருக?
2. நேரடி விற்பனை என்பது யாது?
3. நிறுவனங்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது, கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் 4 தருக?
4. முகவர்களில் பொறுப்புத் தரகர் எனப்படுபவர் யார்?
5. இலாபநோக்குடன் செயற்படும் தனியார் துறை நிறுவன அமைப்புகள் 3 தருக?
6. கம்பனியொன்றைப் பதிவு செய்வதற்கு கம்பனிப் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள் 4 தருக?
7. காசோலையில் புறக்குறிப்பிடல் என்பது யாது?
8. மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் 3 தருக?
9. பரீட்சை மீதி வெளிப்படுத்தாத வழுக்களின் இரண்டு வகைகளை உதாரணத்துடன் தருக?
10. சில்லறைக் காசேட்டில் 'மீள் நிரம்பல் வசக்கட்டு' என்பது யாது?

02.
1. சிறந்த முயற்சியாளரிடம் காணப்படும் பண்புகள் 4 தருக?
2. சாதாரண பங்குக்கும், முன்னுரிமைப் பங்குக்கும் உள்ள வேறுபாடுகள் 3 தருக?
3. பங்குச் சந்தையில் மத்திய வைப்பக முறை (C.D.S) என்பது யாது?
4. பங்குச் சந்தையினால் ஏற்படும் நன்மைகள் 3 தருக.
5. 1. சேமிப்பின் நோக்கங்கள் 3 தருக?
2. ஆதனங்களிலும், சொத்துக்களிலும் முதலீடு செய்தல் என்பது யாது?

03. காந்தனது வணிகத்தின் 31.01.2004இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்காததினால் வித்தியாசமாக இருந்த தொகை ரூபா 3950 வரவு வைக்கப்பட்டிருந்தது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது.
1. கடன் கொடுத்தோரான கமலுக்கு கொடுத்த காசு ரூபா 2250, கமல் கணக்கில் பதியப்படவில்லை.
2. சுமன் திருப்பி அனுப்பிய ரூபா 1200 பொருட்கள் அவர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
3. இயந்திர திருத்தம் ரூபா 800 இயந்திரக்கணக்கில் பதியப்பட்டிருந்தது.
4. விற்பனை நாளேட்டில் ரூபா 3400 அதிகமாகக் கூட்டப்பட்டிருந்தது.
5. பெற்ற வாடகை ரூபா 700 பெற்ற வாடகைக் கணக்கில் இருமுறை பதியப்பட்டிருந்தது.

பின்வருவனவற்றை தயாரிக்க -
1. வழுக்களை திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவு
2. தொங்கல் கணக்கு

04
2004 டிசம்பர் 31இல் இருந்தவாறு பாலனினது முயற்சியாண்மையின் பரீட்சை மீதி பின்வருமாறு

| | வரவு | செலவு |
|---|---|---|
| தொக்கு (01.01.2004) | 24000 | |
| கொள்வனவு | 145000 | |
| விற்பனை | | 285000 |
| சம்பளங்கள் | 10500 | |
| விளம்பரம் | 4200 | |
| வங்கிக்கட்டணம் | 2000 | 1400 |
| முதலீட்டு வருமானம் | | 1400 |
| மின் கட்டணம் | 3500 | |
| வெளிச்சுமைகூலி | 8800 | |
| அனுமதித்த கழிவு | 1200 | |
| பெற்ற கழிவு | | 3100 |
| சுங்கத்தீர்வை | 9200 | |
| காப்புறுதி | 3600 | |
| வங்கிக்கடன் வட்டி | 1300 | |
| உடதிரும்பல் | 6000 | |
| வெளித்திரும்பல் | | 5000 |
| இறைவரி | 4200 | |
| அறவிடமுடியாக்கடன் | 1100 | |
| பெற்ற வாடகை | | 4000 |
| விற்பனைச் செலவுகள் | 2600 | |

மேலதிக தகவல்
1. 31.12.2004இல் தொக்கின் பெறுமதி ரூபா 22000
2. செலுத்த வேண்டிய மின்கட்டணம் ரூபா 1400
விளம்பரம் ரூபா 2100
3. முற்பணமாகக் கொடுத்த சம்பளம் ரூபா 1000
4. பெற வேண்டிய வாடகை ரூபா 800

2004இல் டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக் கணக்கைத் தயாரிக்க?

திரு. S. கருணாகரன்

# சமூகக் கல்வியும் வரலாறும்

## பகுதி I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. 1-40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1, 2, 3, 4 எனும் விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

பின்வரும் தேசப்படத்தைப் பயன்படுத்தி, 1-10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.





1. A-- B,C--D என்பன குறிப்பன.
1. பாக்குத் தொடுடல், மலாக்காத் தொடுடல்
2. பாக்குத் தொடுடல், குக்தொடுடல்
3. பாக்குத்தொடுடல், கினியாவிரிகுடா
4. மலாக்காத் தொடுடல், பாக்குத் தொடுடல்

2. பாரசீகக் குடாவைக் குறிக்கும் இலக்கம் எது?
1. I 2. II 3. III 4. IV

3. H என்ற எழுத்தினால் குறிப்பிடப்படுவது.
1. விக்டோரியா ஏரி 2. அயர் ஏரி
3. பெயிக்கால் ஏரி 4. சிலேவ் ஏரி

4. அ, ஆ, இ என்பன குறிக்கும் நதிகள் முறையே
1. குவாங்கோ, அமூர், சிந்து 2. குவாங்கோ, சிந்து, அமூர்
3. சிந்து, அமூர், குவாங்கோ 4. சிந்து, குவாங்கோ, அமூர்

5. சுலைமான் மலை, ரியான் சான் மலை, கிங்கான்மலை என்பவற்றைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள் முறையே
1. EGF 2. EFG 3. GFE 4. FGE

6. படத்தில் நிழற்றப்பட்டுள்ள பிரதேசம் எது?
1. திபெத் மேட்டுநிலம் 2. தார் பாலைவனம்
3. யூனான் மேட்டுநிலம் 4. டவுன்ஸ் புல்வெளி

7. 2ஆம் உலகப் போரின்போது அனுகுண்டு வீசப்பட்ட கிரோசிமா, நாகசாக்கி ஆகிய இரு நகரங்களையும் குறிக்கும் எழுத்துக்களாவன
1. O,N 2. M,L 3. N,O 4. M,N

8. மாலைதீவுகள், அந்தமான் தீவுகள், இலட்ச தீவுகள் என்பவற்றைக் குறிக்கும் இலக்கங்கள் முறையே
1. 1,2,3 2. 2,3,1 3. 3,1,2 4. 3,2,1

9. அரபிக்கடலையும் தாய்வானையும் குறிக்கும் எழுத்துக்கள் முறையே
1. A,B 2. Z,C 3. Z,B 4. A,P

10. தென்னாசியாவின் மிகவும் பிரசித்தமான ஒரு நகரை T என்பது குறிக்கிறது. அந்த நகரத்தின் பெயர் எது?
1. தாய்வான் 2. ரங்கூன்
4. கொங்கொங் 4. சிங்கப்பூர்

11. நாடாளுமன்றக் கருமங்களின் ஒழுங்கமைப்பு, அவற்றை நடைமுறைப்படுத்தல் ஆகிய பணிகளுக்குப் பொறுப்பானவர்.
1. சபாநாயகர் 2. சபைமுதல்வர்
3. செயலாளர் நாயகம் 4. பிரதம மந்திரி

12. பின்வருவனவற்றுள் இலங்கையினால் ஈரவைப் பாராளுமன்ற முறையை இல்லாதொழித்த சீர்திருத்தம் எதுவாகும்.
1. 1931 டொனமூர் சீர்திருத்தம்
2. 1972 முதலாம் குடியரசு யாப்பு
3. 1947 சோல்பரித்திட்டம்
4. 1978 சனநாயக சோசலிசக் குடியரசு யாப்பு

13. மலையகப் பகுதியில் 1815 ஆம் ஆண்டில் ஆரம்பித்த பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக மக்கள் அதிருப்தி கொண்டமைக்குக் காரணமாக அமைந்தது பின்வருவனவற்றுள் எது?
1. கண்டி மக்களின் பாரம்பரியங்களுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் பிரித்தானியர் மதிப்பளிக்காமை.
2. சிறி விக்கிரமசிங்க ராஜசிங்கனை நாடு கடத்தியமை.
3. நாயக்கர், பிரித்தானியர்களின் அதிகாரங்களை நீக்கியமை.
4. புதிய வரிவகைகளை நடைமுறைப்படுத்தியமை.

14. உலக சனத்தொகைக்குப் போதுமான உணவு உற்பத்தியான போதும், பூமியில் வாழும் எல்லா மனிதர்களுக்கும் போதுமான அளவு உணவு கிடைப்பது இல்லை எனக் கூறப்படுவதற்கான பிரதான காரணமாக அமைவது.
1. உற்பத்தியாகும் உணவில் பல்வகை இன்மை.
2. களஞ்சியப்படுத்துவதில் உள்ள குறைபாடுகளினால் உணவு பெருமளவு வீணாகுதல்.
3. உற்பத்தியாகும் உணவு ஒழுங்குமுறையில் பகிர்வு செய்யப்படாமை.
4. சில அபிவிருத்தியடைந்த நாடுகள் உணவை பெருமளவு நுகர்வு செய்தல்.

15. மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம்.
1. அவை புரட்சிகள் மூலம் பெறப்பட்டவை என்பதாகும்.
2. அவற்றை மீறினால் தண்டனை அனுபவிக்க நேரிடும் என்பதாகும்.
3. அவை தனி ஆளினதும், சமூகத்தினதும் நல்வாழ்வுக்கு வழி வகுக்கின்றன என்பதாகும்.
4. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அவற்றுக்கு விசேட கவனம் செலுத்துகின்றமை ஆகும்.

16. சனநாயக ஆட்சிமுறையுள்ள நாடொன்றில் எதிர்க்கட்சி ஒன்று மேற்கொள்ளவேண்டிய பிரதான செயற்பாடு எதுவாகும்?
1. அரசாங்கத்துக்கு எதிரான கொள்கைகளை மக்களிடம் வளர்க்க வேண்டும்.
2. சகல அரசாங்க நடவடிக்கைகள் மீதும் எதிரான கருத்துக்களை வெளியிடவேண்டும்.
3. தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
4. அரசாங்கம் மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளிலும் பிழைகளை எடுத்துக்காட்டுவதற்கு முன்னின்று உழைக்கவேண்டும்.

17. தென்கிழக்காசியாவில் அமைந்துள்ள சர்வதேச ஆராய்ச்சி நிலையம் எதுவாகும்.
1. நெல் ஆராய்ச்சி நிலையம்
2. பயிர் ஆராய்ச்சி நிலையம்
3. மிருக வள ஆராய்ச்சி நிலையம்
4. நிலவள ஆராய்ச்சி நிலையம்.

18. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில், இறப்பு வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கான பிரதான காரணம் எதுவாகும்.
1. வைத்தியத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி
2. எழுத்தறிவில் ஏற்பட்ட வளர்ச்சி
3. பெண்களின் சமூக அந்தஸ்தில் ஏற்பட்ட வளர்ச்சி
4. பொருளாதார வளர்ச்சி

19. கண்டி இராசதானியில் சித்திர சிற்ப கலைகளின் போது பெருமளவுக்கு கையாளப்பட்ட கலை வடிவங்களை உள்ளடக்கிய விடையினை தெரிக.
1. அன்னப்பறவையின் பிணைப்பு, மலர்க்கன்னி, அன்னாசி மலர், கலசம்
2. மரச்செதுக்கல் கலை, சிற்பக்கலை, தையற்கலை, செதுக்கல்கலை
3. மரச்செதுக்கல் கலை, மலர்க்கன்னி, அன்னாசிமலர், கலசம்
4. அன்னப்பறவையின் பிணைப்பு, கலசம், சிற்பக்கலை, நூல் நூற்றல் கலை

20. சோல்பரி யாப்பு முறைச் சீர்திருத்தங்களினால் புகுத்தப்பட்ட மாற்றம் பின்வருவனவற்றுள் யாது?

# எமது பிள்ளைகளை எம்மிடமிருந்து பிரித்து தமிழினத்தை ஒருபோதும் அழிக்க முடியாது!

## காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம்——

எமது இளம் பிள்ளைகளை எம்மிடமிருந்து பிரித்ததன் மூலம் முழுத் தமிழ்த் தேசிய இனத்தையும் அழித்துவிட முடியாது. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு-வடபகுதியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பொதுமக்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் சங்கத்தால் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தங்களுடைய அரசின் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமற்போன எமது பிள்ளைகளுக்கு இதுவரை காலமும் என்ன நடந்தது என்ற விபரத்தை நீங்கள் எமக்குத் தரவில்லை. சகல அதிகாரங்களும் கொண்ட உங்களுக்கு தெரியாமல், இந்த நாட்டில் அதுவும் உங்களது பாதுகாப்புப் படையினரால் நடத்தப்பட்ட இந்தக் கொடூர நிகழ்வு தெரியாமல் போனதா? நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகிய நீங்கள் இதுவரை காலமும் எமது கோரிக்கைக்கு செவிசாய்க்காது இருந்தமை தங்களுடைய பொறுப்பற்ற தன்மையையே எடுத்துக் காட்டுகிறது. வாருங்கள் மன்னிப்பு வழங்கி பாதுகாப்பு தருகின்றோம் என்று அழைத்து, எமது அப்பாவிப் பிள்ளைகளை வருடக் கணக்காக மறைத்து வைப்பது நியாயமான காரியமா? கைதுசெய்யப்பட்ட எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதை இது வரை காலமும் நீங்கள் ஏன் வெளிப்படுத்தவில்லை.

1997ஆம் ஆண்டு வருட இறுதியில் E.P.D.P. செயலாளர் நாயகமாகிய டக்ளஸ் தேவானந்தவுடன் நாம் உங்களை வந்து சந்தித்தபோது, பதினாறு பேர் மட்டும் தான் உயிருடன் இல்லை. ஏனையோர் பற்றிய விடயங்களுக்கு நான் பொறுப்பு என்று கூறினீர்கள். நீங்கள் கூறி இன்று பத்து வருடங்கள் ஆகின்ற போதும் எதுவித நடவடிக்கைகளும் நீங்கள் மேற்கொண்டதாக எமக்குத் தெரியவில்லை. உங்களுடைய வார்த்தைகளை நம்பி எமது பிள்ளைகள் வருவார்கள் என, வழி மேல் விழி வைத்து ஏங்கியிருந்த எமது நெஞ்சங்களில் நீங்கள் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டீர்கள். எமது பிள்ளைகளுக்கு மரண அத்தாட்சிப் பத்திரம் எடுக்கும்படி அறிவித்துள்ளீர்கள்.

நீங்கள் அரசியல்வாதியாக இருந்த காலத்தைவிட அதிக காலம் ஒரு கணவனுக்கு தாரமாகவும், பெற்ற பிள்ளைகளுக்கு தாயாகவும் இருந்துள்ளீர்கள். ஒரு பெண் கணவனை இழந்து தவிப்பது எவ்வளவு தூரம் அந்தப் பெண்ணின் மனநிலையை பாதிக்கும் என்பதை நீங்களும் அனுபவத்தால் உணர்ந்துள்ளீர்கள். பிள்ளைகளை இழந்தால் பெற்ற தாய் எவ்வளவு வேதனையை அனுபவிப்பாள் என்பதும் உங்களுக்கு விளங்கும் என எண்ணுகிறோம்.

உங்கள்அரசின் பாதுகாப்பு படையினருக்கு எமது பிள்ளைக் களை கைதுசெய்ய அதிகாரத்தை வழங்கியது யார்? எமது பிள்ளைகள் எவரையாவது கொலை செய்தார்களா? அல்லது கற்பழித்துள்ளார்களா? கைதுசெய்யப்படுகின்றபோது கையில் குண்டுகளோ, துப்பாக்கிகளோ வைத்திருந்தனரா?

எமது இளம் பிள்ளைகளை எம்மிடமிருந்து பிரித்ததன் மூலம், முழுத்தமிழ்த் தேசிய இனத்தையும் அழித்துவிட முடியாது என்பதை மனக்குமுறலுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

ஒரு பெண்ணின் ஆட்சியில் தமிழ் பெண்களுக்கு இத்தனை கொடுமைகளா?

# தென்னிந்திய திருச்சபை பராமரிப்பு நிலையத்தில் சிறுவர் தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள்!

நெடுந்தீவு——

உலக சிறுவர் தினத்தையொட்டி நெடுந்தீவு பிரதேச தென்னிந்திய திருச்சபை பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் கலை நிகழ்வுகள் - எதிர்வரும் முதலாம் திகதி மிகவும் சிறப்பாக இடம்பெறவுள்ளது. அன்றைய தினமே ஆசிரியர் தினம், நல்லொழுக்க தினம் என்பவற்றின் நிகழ்வுகளும் திருச்சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

தென்னிந்திய திருச்சபை நெடுந்தீவு பகுதி போதகர் ஆர். யோன் செல்வம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் கே.என்.எச். நிறுவனத்தின் இணைப்பாளர் அனிகுறின் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அன்றையதினம் சிறுவர்கள், ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன், சிறுவர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட - கதை, கவிதை, பேச்சு, சித்திரம் போன்ற போட்டிகளிலும், சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் ஆகிய போட்டிகளிலும் வெற்றிபெற்ற சிறார்களுக்கான பரிசில் வழங்கலும், மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை - உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு தென்னிந்திய திருச்சபை பகற் பராமரிப்பு நிலைய சிறார்கள், பெற்றோர், ஆசிரியர் போன்றோர் 5 நாள் அகில இலங்கை சுற்றுலாப் பயணம் ஒன்றையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (113)

# ஆயிரமாவது வீடு கையளிக்கும் நிகழ்வு கற்கோவளத்தில் இன்று நடைபெறும்

கற்கோவளம்——

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் யாழ்.அலுவலகத்தால் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்டுவரும் தற்காலிக வீடுகளில், கற்கோவளம் புனிதநகரில் அமைக்கப்பட்ட ஆயிரமாவது வீடு பயனாளியிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு கற்கோவளம் புனித நகரில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், அகதிகளுக் கான ஐ.நா.தூதரகத்தின் பிரதி வதிவிடப் பிரதிநிதி திருமதி மஸ்ரிநொட்ஸ், ஜப்பான் தூதராலயப் பிரதித் தலைமை அதிகாரி திருமதி கரூபி, அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் யாழ். அலுவலகத் தலைமை அதிகாரி அக்ரன் ரகாய் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிறுவனம் ஆயிரத்து 588 வீடுகளை அமைக்கும் திட்டத்தின்கீழ்- சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென மணற்காட்டில் 210 வீடுகளும், கற்கோவளத்தில் 111 வீடுகளும், பொற்பதியில் 93 வீடுகளும், புனித நகரில் 139 வீடுகளும், குடத்தனையில் 35 வீடுகளும், முனையில் 30 வீடுகளும் அமைக்கப்பட்டுவருகின்றன.

மேலும் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 276 வீடுகளும், சண்டிலிப்பாயில் 72 வீடுகளும், தெல்லிப்பளையில் 308 வீடுகளும், உடுவிலில் 92 வீடுகளும், கோப்பாயில் 37 வீடுகளும், மண்டைதீவில் 145 வீடுகளும், யாழ்ப்பாணத்தில் 10 வீடுகளும் அமைக்கப்பட்டுவருகின்றன.

இவ்வாறு அமைக்கப்படும் வீடுகள் ஒவ்வொன்றும் 70 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ரூபவாஹினி கூட்டுத்தாபன ஊடகப் பயிற்சியை யாழ். மாணவர்கள் இருவர் பூர்த்தி செய்தனர்

கொழும்பு——

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தால் நடத்தப்படும் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை பல்கலைக்கழக மாணவர்களுக்கான விசேட ஊடகப் பயிற்சியை இந்த ஆண்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரு பட்டதாரி மாணவர்கள் பூர்த்திசெய்துள்ளனர்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தால் இரண்டாவது தடவையாக நடத்தப்பட்ட இந்த விசேட ஊடகப் பயிற்சி நெறிக்கு, இந்த ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்ச் சிறப்புக்கலைப் பட்டதாரி மாணவன் பாலசிங்கம் சிறீபவன் (சங்கானை), சமூகவியல் சிறப்புக்கலைப் பட்டதாரி மாணவன் நாகலிங்கம் ரவிக்குமார் (அச்சுவேலி) ஆகிய இருவரும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இரண்டாவது தடவையாக நடைபெற்ற இந்தப் பயிற்சி நெறிக்கு - முதற்தடவையாகத் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மாணவர்கள் இவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 25 மாணவர்களுக்கான விசேட ஊடகப் பயிற்சி - இந்த ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பமாகி, தொடர்ந்து ஆறு மாதங்கள் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் நடைபெற்றுவந்தது.

இவர்களுக்கான பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் எம்.என். சுஹைர் கலந்துகொண்டார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகரும், ரூபவாஹினி கூட்டுத்தாபனப் பணிப்பாளர்சபை உறுப்பினருமான திருஞானசுந்தரம், ஊடகப் பயிற்சி மற்றும் ஆய்வுப் பணிப்பாளர் திருமதி சீதா பியசேன உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்தப் பயிற்சிநெறியின் தெரிவுக்காக அடுத்த ஆண்டுகளில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் விண்ணப்பிக்கமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விசேட பயிற்சி தொலைக் காட்சி நிகழ்ச்சி தயாரிப்பு, நிகழ்ச்சி அறிவிப்பு, செய்தி தயாரிப்பு, நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு, எடிற்றிங், விளம்பரம், சந்தைப்படுத்தல், கலையக ஒழுங்கமைப்பு, கமரா ஆய்வு உள்ளிட்ட பல்துறை சார்பான நேரடிப் பங்கேற்றல் முறை சார் பயிற்சியாக நடைபெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவில் கடும் வரட்சி

நெடுந்தீவு——

நெடுந்தீவு பிரதேசத்தில் நிலவும் கடும் வரட்சியால் வெட்டுக்கழிக்குளம் வற்றி அதிலிருந்து உவர் புழுதி, காற்று மூலம் அப்பிரதேசம் எங்கும் வீசப்படுவதால் குளத்தைச் சூழவுள்ள பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் காற்றுக் காரணமாக அள்ளி வீசப்படும் உவர் புழுதிகாரணமாக குளத்தை அண்டியபகுதியிலுள்ள பொதுமக்கள் தங்கள் சொந்த இடங்களில் இருந்து பகல் வேளையில் வெளியேறி உறவினர்கள் வீடுகளில் வசித்து வருவதுடன் அப்பகுதியில் உள்ள கனிஷ்டதரப் பாடசாலையை தேவாலயம் ஒன்றில் தற்காலிகமாக இயங்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதான வீதியை அண்டி இக்குளம் இருப்பதனால் வீதியால் பயணம் செய்யும் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள், அரச ஊழியர்கள் போன்றோரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் சுவாசம் தொடர்பான நோய்களுக்கு உள்ளாக வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# பாடசாலைக் கல்வியை தொடர்வதற்கான ஏற்பாடு

யாழ்ப்பாணம்——

யாழ்ப்பாண பிரதேச செயலரின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு அண்மையில் மேற்கொண்ட நடவடிக்கையின்போது, மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஜே/78 கிராமசேவையாளர் பிரிவில் பாடசாலை செல்லாது நின்ற 13 மாணவர்கள் இனங்காணப்பட்டு மீண்டும் அவர்கள் தத்தமது பாடசாலைகளில் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை செல்லாதிருக்கும் மாணவர்கள் பற்றிய விபரங்களை அறியத்தருமிடத்து அவர்களுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி அவர்கள் தமது கல் வியைத் தொடரும் விதத்திலான நடவடிக்கையை மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு மூலமாக மேற்கொள்ள முடியுமென யாழ்.மாநகரசபை சுகாதாரவைத்திய அதிகாரி டொக்டர் மா.மரியதாஸன் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கணினி அன்பளிப்பு

சுதுமலை——

சாவல்கட்டு மாணவர் முன்னேற்ற நிலையத்துக்கு யாழ். தென் இந்திய திருசபையினரால் கணினி ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சாவல்கட்டு இளைஞர்கள், அந்தப் பகுதி மாணவர்களுக்கு இலவசமாக வகுப்புகளை நடத்திவருகின்றனர்.

இவர்களின் இந்தக் கல்விச் செயற்பாட்டை மேலும் மேம்படுத்தும் முகமாக, யாழ். தென்னிந்திய திருச்சபையின் கொக்குவில் கிளை போதகரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ். மாவட்ட தென்னிந்திய திருச்சபை கலாநிதி தியாகராஜா போதகரினால் மேற்படி நிலையத்துக்கு கணினி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. (44)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : ஆர்.லக்ஷி
முகவரி : நாரந்தனை மத்தி.

அகவை நான்கு



பெயர் : ஜெயகுமார் ஜாதுசன்
முகவரி : அல்வாய்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------



கூப்பன்கள் பதக்கம், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர் ஒப்பம்


# சுருக்கெழுத்துக்கழக ஆண்டு விழா

வடமராட்சி——

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டிய சமய நிகழ்வொன்று, எதிர்வரும் 1ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மாலுசந்திப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

ஏனைய நிகழ்வுகள் மறுநாள் 2ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் வி.செ. சுவாமிநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது, மேற்படி கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு மலரும் வெளியிடப்படவுள்ளது. மலர் வெளியீட்டுரையை எஸ்.கனகசிங்கமும், மலர் ஆய்வுரையை மு.திருநாவுக்கரசும் நிகழ்த்தவுள்ளனர்.

# நவராத்திரி பூஜைகள்


கொக்குவில்——

எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 12 ஆம் திகதி வரையான பத்துத் தினங்கள் அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநாதவரதநாராயணர் தேவஸ்தானத்தில் நவராத்திரி விரத பூசைகள் மிகச் சிறப்பாக நடைபெற இருக்கிறது.

பத்தாவது தினமான 12ஆம் திகதி புதன்கிழமை விஜயதசமி பூசை நடைபெறும். (206)

# ஆயுதபலம் ஒன்றின் மூலம் மட்டுமே தமிழ்மக்கள் விடுதலை பெறமுடியும்

## அரசியற்துறைப்பொறுப்பாளர் எழிலன்



கிளிநொச்சி

தமிழ் மக்கள் ஆயுத பலம் ஒன்றின் மூலம் மட்டுமே விடுதலையைப் பெற்றுக் கொள்ள முடியும் என திருகோணமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பண்பாட்டு பண்டபத்தில் நேற்று நடைபெற்ற போருக்கு அறை கூவல் விடுக்கும் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் பேச்சுவார்த்தை நடத்தும் போது ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு வாருங்கள். என்று எந்த நாடும் எம்மைக் கேட்கவில்லை. நாங்கள் ஆயுத ரீதியில் தமிழ் மக்களின் விடிவுக்கான ஒரு நியாயமான போரை நடத்தி வருகிறோம் என்பதை சர்வதேசம் விளங்கிக் கொண்டதன் வெளிப்பாடாகவே, "எமது போராட்டத்தைப் பற்றி இன்று சர்வதேசம் நன்கு விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால், தமிழ் மக்களுக்கு எந்த உரிமையையும் வழங்கக் கூடாது என்பதில் சிங்கள அரசு உறுதியாக உள்ளது.

இதன் பிரதிபலிப்பாகவே மஹிந்த ஒற்றையாட்சியின் கீழ் மட்டுமே இனப் பிரச்சினைக்கான தீர்வுஎனக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு சில சிங்கள இனவாதக் கட்சிகளும் துணை போயிருக்கின்ற நிலையில் இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே மஹிந்தவுடன் இணைந்து செயற்பட இனவாதக் கட்சிகள் ஒன்றுகூடி கைச்சாத்திட்டிருக்கின்றன.

சிங்கள அரசிடமிருந்து தமிழ் மக்கள் ஒருபோதும் விடுதலையை எதிர்பார்க்கமுடியாது.

இனி ஒருபோதும் விடுதலைப் புலிகளின் பலத்தைக் காட்டுவதற்கான ஒருபோரை நடத்த வேண்டிய அவசியம் இல்லை. எமது விடுதலைக்கான ஒரு போரை மட்டுமே நாம் மேற்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது. இதற்கு தமிழ் மக்கள் அனைவரும் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும்.

போருக்கான காலம் குறிக்கப்பட்டுவிட்டது. எனவே, அந்த நாளை நோக்கிய நகர்வாகவே நாங்கள் இவ்வாறான தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு, கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில், தமிழீழ தேசியக்கொடியை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் பூவண்ணன் உரைநிகழ்த்தினார். அரச திணைக்களங்களின் தலைவர்கள், பணியாளர்கள் என 300 பேருக்கு மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

(அ)

# 2 ஆம் லெப். கதிர்ச்செல்வன் நினைவாக முழங்காவிலில் கல்வி நிலையம் திறந்து வைப்பு



முழங்காவில் - வலைப்பாட்டு கிராமத்தில் தமிழீழ மாணவர் அமைப்பினரால் 2 ஆம் லெப்.கதிர் செல்வன் நினைவாக கல்வி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

முழங்காவில்

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் நடைபெற்ற இந்தக் திறப்புவிழாவில் தேசியக் கொடியை முழங்காவில் பிரதேச அரசியற் துறைப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். 2 ஆம் லெப். கதிர் செல்வனின் திருவுருவப் படத்திற்கு கதிர்செல்வனின் தந்தையார் ஈகச் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து தியாகி திலீபனின் திருவுருவப்படத்துக்கு வலைப்பாடு பங்குத்தந்தை மலர்மாலை அணிவித்தார். கல்வி நிலையத்தை மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன் நாடாவை வெட்டித் திறந்துவைக்க, தளபாடங்கள் தமிழீழ வனவளப்பாதுகாப்புப் பிரிவினரால் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இந்தப் பிரதேச மாணவர்களின் கல்வி மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திரைப்பட வெளியீட்டுப் பிரிவு ஆகிய வற்றின் உதவியுடன் இந்தக் கல்வி நிலையம் அமைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் கல்வி நடவடிக்கைகளை வலைப்பாடு இளைஞர் ஒன்றியத்தினரும், கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்பினரும் மேற்பார்வை செய்யவுள்ளனர் .

## காலச் சுவட்டில்...

**இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை**

**செப்ரெம்பர் - 28**

1867 : அகில உலக உழைப்பாளிகள் சங்கம் அமைக்கப்பட்டதாக கார்ல் மார்க்ஸ் லண்டனில் அறிவித்தார்.

1905 : மொராக்கோ பிரச்சினைபற்றிய பேச்சுவார்த்தை நடத்த பிரான்ஸும், ஜேர்மனியும் ஒத்துக்கொண்டன.

1911 : இத்தாலிக்கும், கிரீசுக்கும் இடையே திரிப்போலி போர் ஆரம்பமாகியது.

1914: அஞ்சல் வழி வர்த்தகத்தை ஆரம்பித்துவைத்த ரிச்சர்ட் வாரன்சியர்ஸ் விஸ்கோன்சில் என்பவர் வாகேஷா என்ற இடத்தில் காலமானார்.

1922: முசோலினியின் படை ரோம் நகரை நோக்கி முன்னேறியது.

1933: பிரிட்டனில் பார்ரோ பல் தொழில்நுட்ப நிறுவனத்தில் தொலைக்காட்சிப் பொறியியல் படிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1937 : சீனா மீதான ஜப்பானின் தாக்குதலை சர்வதேச சங்கம் வன்மையாகக் கண்டித்தது.

1938 : முதன்முதலாக பெட்ரோல் எரிபொருளால் ஓடும் காரை வடிவமைத்த அமெரிக்கரான சார்ல்ஸ் எட்கர் டெர்யா காலமானார்.

1941 : மாஸ்கோவில் அமெரிக்கா, பிரிட்டனர், ரஷ்யா முத்தரப்பு மாநாடு கூடியது.

1958 : டோக்கியோவில் அடித்த கடுமையான புயல் காரணமாக 1300 இற்கும் மேற்பட்டவர்கள் இறந்துபோயினர்.

1961: ஐக்கிய அரபுக் குடியரசில் சிரியா பகுதியில் டமாஸ்கஸ்ஸில் எகிப்தின் ஆதிக்கத்தை எதிர்த்து இராணுவ அதிகாரிகள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்.

1965: கியூபாவில் தங்க விருப்பம் இல்லாதவர்கள் சிறிய படகுகளில் நாட்டைவிட்டு வெளியேறிச் செல்லலாம் என பிடல் காஷ்ட்ரோ அறிவித்தார்.

1970 : அரபு உலகின் மிகச் சக்திவாய்ந்த தலைவரான எகிப்திய ஜனாதிபதி அப்துல் கேமல் நாஸர் மாரடைப்பினால் காலமானார்.

1971: நிலாவின் சுற்றுவட்டப் பாதையில் பயணப்பட்டு தொலைக்காட்சிப் படங்களை எடுத்து அனுப்புவதற்காக ரஷ்யா லூனா - 19 என்ற விண்கலதை ஏவியது.

1978 :34 நாட்கள் மட்டுமே பரிசுத்த பாப்பரசராக இருந்த முதலாம் ஜோன் போல் காலமானார். இவர் இந்தவருடம் ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதியே பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1994 : வடகொரியாவும் அணுகுண்டு தயாரிக்கும் நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

தொகுப்பு - சந்துரு

# மணலாறுக் கிராம மக்களுக்கான துணைப்படைப் பயிற்சி ஆரம்பம்

முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்ட மணலாறு மக்களுக்கான முதலாவது துணைப்படை பயிற்சி நேற்று முந்தினம் தொடங்கியது.

கடற்புலி லெப். கேணல் திருவடி பயிற்சிப் பாசறையில் நேற்று முன்தினம் காலை இந்தப் பயிற்சியின் தொடக்க விழா நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வுக்குத் துணைப்படை வீரர் பாஸ்கரன் தலைமை வகித்தார். பொதுச்சுடரை கடற் புலிகளின் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் ஏற்றிவைத்தார்.

லெப். கேணல் திருவடியின் திருவுருவப்படத்துக்கான ஈகைச் சுடரை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் ஏற்றிவைத்தார். மலர்மாலையை போராளி நளன் அணிவித்தார்.

பயிற்சிப் பாசறையின் பெயர் பலகையை தளபதி சித்திராங்கன் திரைநீக்கம் செய்துவைத்தார். தளபதி விநாயகம் ஆசியுரை நிகழ்த்தினார்.

லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் சிறப்புரையாற்றினர். இந்த துணைப் படைப் பயிற்சியில் 200 பேர் பங்கேற்றதும் குறிப்பிடத்தக்கது.

# உயிலங்குளம் சோதனைச் சாவடி இரவு 10 மணிவரை திறந்திருக்கும்!

மன்னார்

மன்னாரில் இன்று நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் பங்கேற்கும் மக்களின் போக்குவரத்து வசதிகருதி இரவு 10 மணிவரை உயிலங்குளம் சோதனைச்சாவடியை திறந்திருக்க படைத் தரப்பு இணங்கியுள்ளது.

மன்னாரில் இன்று நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வின் போக்குவரத்து தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களும் மன்னார் படை அதிகாரிகளும் பங்கேற்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளிலிருந்து தேசிய எழுச்சி நிகழ்வுக்கு வருகை தரும் மக்களின் போக்குவரத்து தொடர்பாக இந்தக் கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப் பட்டது.

உயிலங்குளம் இராணு சோதனைச் சாவடியைத் தேசிய எழுச்சி நிகழ்வு நாள் அன்று இரவு 10 மணிவரை திறப்பதற்கு இந்தக் கலந்துரையாடலின் போது படைத்தரப்பு இணக்கம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்தாவிட்டால் உண்ணாவிரதப் போராட்டம் நடாத்த ஏற்பாடு

வவுனியா

தமது சொந்தக் கிராமத்தில் ஒரு வாரத்தினுள் மீளக் குடியமர்த்தாவிட்டால் வவுனியா போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்போவதாக வவுனியா கோதாண்டர் நொச்சிகுளம் மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இராணுவத்தினரால் மேற்கொண்ட நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த தம்மை தமது சொந்த இடத்தில் குடியமர்த்துமாறு கடந்த ஆறு வருடங்களாக அந்த மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

பல்வேறு அவலங்களுக்கு மத்தியில் தற்போது தரணிக்குளம் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்துவரும் அவர்களுக்கு நிவாரணமோ அல்லது அடிப்படைத் தேவைகளோ எதுவுமே கொடுக்கப்படவில்லை.

வவுனியா நகரில் இருந்து வடமேற்கு திசையில் 16 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இந்த மக்களின் கோதாண்டர் நொச்சிக்குளம் கிராமத்தை சிங்கள இராணுவத்தினர் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்திவிட்டு மக்களின் ஆதாரங்களை அனுபவித்து வருகின்றனர்.

தங்கள் அவல வாழ்வு குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பியுள்ள முறைப்பாட்டில் -

109 குடும்பங்கள் வாழ்ந்த கிராமத்தில் தற்போது எவரும் இல்லை என்றும், இராணுவத்தினரின் இந்த நடவடிக்கை காரணமாக எங்களுடைய 610 ஏக்கர் விவசாய நிலம் பாழடைந்துள்ளதாகவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கால்நடைகள் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவையும் இராணுவத்தினரின் பிடியில் அகப்பட்டிருப்பதாகவும், விவசாய நிலம், மேட்டுநிலம், கால்நடைகள் ஆகியவற்றின் மூலம் இராணுவத்தினரே பயனடைந்து வருவதாகவும் அந்த மக்கள் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் தெரிவிப்பது போன்று அது உயர் பாதுகாப்பு வலயம் இல்லை என்றும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் என்ற ரீதியில் அந்த இடத்தைப் பார்வையிட்டு, தம்மை மீளக் குடியமர்த்துமாறும் அந்த மக்கள் தமது வேண்டுகோள் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வைரவர் புளியங்குளம் பகுதியில் அமைந்திருக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் பெருமளவில் சென்ற இந்த மக்கள் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் வவுனியா பிரதிநிதியிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்துள்ளனர்.

இதனைப் பெற்றுக்கொண்ட கண்காணிப்புக்குழு அதிகாரி, இராணுவத்தினருடன் இது தொடர்பாகக் கலந்துரையாடி நல்லதொரு முடிவை வழங்குவதாகவும், மக்கள் அவசரப்பட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டனர்.

இதன்பின்னர் அந்த மக்கள் வவுனியா குருமன்காட்டுப் பகுதியிலுள்ள யு.என்.எச்.சி.ஆர் காரியாலயத்துக்கும் சென்று அந்த நிறுவன மாவட்ட பிரதிநிதியிடம் தமது கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

(03)

# கேணல் சங்கரின் நினைவுத் தூபி திறந்து வைப்பு

முல்லைத்தீவு

இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியின் தாக்குதலில் 2001 ஆம் ஆண்டு 9 மாதம் 26 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளின் ஒருவரான கேணல் சங்கரின் நினைவுத் தூபி நேற்றுமுன்தினம் முத்தையன் கட்டு- ஜீவாநகர் கிராமத்தில் மாலை 4.00 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

எண்ணிப் பார்க்காமல் பேசுவது, முதலில் சரியாகக் குறிபார்த்துக் கொள்ளாமல் சுடுவது போன்றது.

## நமது நோக்கு

# பொங்குதமிழ் உணர்வும்; பூரிக்கும் இன உணர்வும்...

நாளை மறுதினம் பொங்கு தமிழ் நிகழ்வில் தமது எழுச்சியையும், உணர்ச்சியையும் சிங்கள தேசத்திற்கும் - சர்வ தேசத்திற்கும் வெளிக்காட்டுவதற்கு குடாநாட்டு மக்கள் தயாராகிவரும் சூழலில், தென்பகுதி மக்களோ தங்களின் அடுத்த ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான தேர்தலுக்கான அரசியல்வாதிகளின் ஆரம்பக்கட்ட பிரசாரங்களில் முரண் நிலைக்கருத்து மோதல்களுக்குள் சிக்கி குழம்பி வருகின்றனர் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

இங்கே தமிழ்த் தேசியத்தின் எழுச்சியென்பது தமிழ் மக்களின் வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான விடுதலைப் போராட்டத்தின் முக்கிய வடிவங்களில் ஒன்றாக பரிமாணம் கொண்டு பொங்குதமிழாகி பிரவகித்துவரும் நிலையில், தென்பகுதியில் சிங்கள பௌத்த பெரும்பான்மை மக்கள் தங்களின் அரசியல் தலைமைகளின் வாய்ச்சவடால் தனமிக்க வாக்குறுதிகளின் பின்னால் வாய்பிளந்து அலைபவர்களாக உள்ளனர்.

மீண்டும் தங்கள் வாசலுக்கு போரின் சுவாலைகளை - அதிர்வுகளை, அழிவுகளை, துயரங்களை வரவழைத்து அதன்மூலம் அரசியல் ஆதாயங்களையும், இலக்குகளையும் அடையத்துடிக்கும் வேட்கையுடன், சமாதான சூழலை தகர்த்தழிக்கும் ஓர்மத்துடன்கூடிய மேலாதிக்க வெறி தலைக்கேறிய நிலையில், அரசியல் கோஷங்களை முன்வைப்போரை தென்பகுதி மக்கள் எந்தவகையில் ஏற்றுக்கொள்வார்கள் என்பது குறித்து எதையும் எதிர்வு கூறுதல் தேவையற்றது என்றாலும்- அந்த மக்கள் தங்களைப் பற்றியும், தங்களின் எதிர்கால நலன்குறித்தும், கடந்த யுத்தகால அனர்த்த பாதிப்புக்கள் குறித்தும் மிக ஆழமாக யோசிக்க வேண்டிய முக்கியமான கட்டத்தில் நிற்கிறார்கள் என்பதை அழுத்தமாகக் கூற வேண்டிய அவசியம் இன்றைய சூழலில் ஏற்பட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

அவர்கள் தெரிவு செய்யப்போகும் அடுத்த ஜனாதிபதியோ அல்லது அடுத்த அரசாங்கமோதான் இந்த நாட்டின் தலைவிதியை முழுமையாக நிர்ணயிக்கப் போகிறது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வது அவசியம்.

பௌத்த மதவாதமும், சிங்கள இனவாதமும், பேரினவாத மேலாதிக்க அரசியல் நகர்வுகளும், அழகான ஒரு சிறு தீவையும், அமைதியையும், இரக்கத்தையும் போதிக்கும் புத்த மதக்கோட்பாடுகளையும் கடந்த காலங்களில் எவ்வாறு புறந்தள்ளி நாசப்படுத்தியுள்ளது என்பதை இரத்த வரிகளால் எழுதப்பட்டுவரும் இந்த நாட்டின் சமகால அரசியல் வரலாறு மிகத்தெளிவாகவே பதிவு செய்துவைத்துள்ளது.

அந்த வரலாற்றுப் பாடங்களின் மூலமோ, மூன்று தசாப்த கால யுத்தத்தின் அனுபவப் பட்டறிவின் மூலமோ, சிங்கள அரசியல் தலைமைகள் எந்தவிதமான ஞானத்தையும் பெறவில்லை என்பதையே அவர்களின் இன்றைய அரசியல் பிரசார உளறல்கள் எடுத்துக் காட்டிவருகின்றன.

- நோர்வேயின் அனுசரணையாளர் பணியை நீக்கவேண்டும்.
- போர் நிறுத்த உடன்பாட்டை மீளாய்வு செய்யவேண்டும்.
- ஒற்றையாட்சி மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்.

போன்ற சிங்கள பௌத்த தீவிரவாத சக்திகளின் நிலைப்பாடுகள் சமாதான முன்னெடுப்புக்களின் நிலையை முற்றாகவே செயலிழக்கவைக்கும் இலக்கினைக் கொண்ட தாக இருக்கையில் எதிர்வரும் ஜனாதிபதி மாற்றமோ, ஆட்சி மாற்றமோ, ஆரோக்கியமான - நம்பிக்கையூட்டும் மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தும் என்று நம்புவது சாத்தியமே இல்லை.

சர்வதேச சமூகத்தின் சமாதான அழுத்தங்களை சிங்கள ஆட்சிபீடம் எப்போதும் போல் ஏளனமாகப் பார்த்து ஏமாற்றி காலம் கடத்தும் வியூகத்துடனேயே இன்னமும் தனது அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு வருவதை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

இந்தச் சூழலில் நியாயமான அரசியல் தீர்வென்பது தூரத்துப் பச்சையாகத் தொடர்ந்தும் இருப்பதை மௌனமா கப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பதைவிடவும் முட்டாள்தனம் வேறெதுவும் கிடையாது.

நமது உரிமை, நமது நிலம், நமது வாழ்வு, நமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் அனைத்தையும் முழுமையாகப் பாதுகாப்பதற்கான எமது போராட்டம் சமாதானத்தின் பேரால் மந்தமாக்கப்பட்டு பின்தள்ளப்படுவதை தமிழ் மக்கள் இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்ற பொறுமையின் எல்லையிலேயே பொங்கு தமிழாய் எழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளனர்.


இந்த எழுச்சி ஒரு வரலாற்றுத் தேவையாகும். எம் தாயக மண்ணில் நாம் சுய நிர்ணய உரிமை பெற்றவர்களாக சுதந்திரமாக வாழ சிங்களப் பேரினவாதம் ஒருபோதும் அனுமதிக்கப்போவது கிடையாது என்பதை மூன்றரை ஆண்டுகால போலிச் சமாதானம் நிரூபித்துள்ள நிலையில்....

நீறுபூத்த நெருப்பாக மெல்ல மெல்ல அணைந்து சாம்பராவதைவிட எரிமலையாய் குமுறியெழுவதற்கு ஒரு அர்த்தம் இருக்கும் என்பதே இன்று ஈழத் தமிழ் மக்களின் இதயக் குமுறலாக உள்ளது.

அதுவே பொங்கு தமிழாக எழுச்சி கொண்டுவருகிறது. இதனைச் சிங்கள தேசமும், சர்வதேசமும் தார்மீக சிந்தையுடன் புரிந்துகொள்ளவேண்டும். இதுவே மனித உரிமைகளை மதித்து அங்கீகரிக்கும் துடிப்புக்கொண்ட மானுட வர்க்கத்தின் பெருவிருப்பாகும்

*267, Navalar Road,*
*Jaffna.*
*T.P. - 021-2225107*
*www.eezhanaadu.com*

நாடும் நடப்பும்




**'ஊர்சுற்றி' யார் பார்வையில்...**

# காற்றில் பறக்கும் வாக்குறுதிகள் வேண்டாம் தமிழீழ அங்கீகாரமே இன்றைய தேவை!

கலியாணம் கட்டினால் பைத்தியம் தெளியுமா, பைத்தியம் தெளிந்தால் கலியாணமா? தமிழ் நாட்டின் கிராமப் பகுதிகளில் இப்படிச் சொல்லி உதாரணத்துக்குச் சில கதைகள் சொல்லுவார்கள். இங்கேயும் தேர்தல் வந்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வருமா? இனப் பிரச்சினைக்குத் தீர்வு வந்தபின் தேர்தல் வரலாமா? என்று கேட்டுக்கொண்டே வந்தார் நண்பர் பரமசிவம்.

நீர் சொல்வது அவ்வளவு பொருத்தமில்லையானாலும், கொஞ்சம் பொருந்துமென்றும் வைத்துக்கொள்ளலாம். ஏனென்றால் தேர்தல் வரும் சமயத்திலெல்லாம் தாங்கள் தேர்தலில் வெற்றிபெற்றுப் பதவிக்கு வந்தால் முதல் வேலையாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாகத்தான் சொல்லுவார்கள். வாக்குறுதியளிப்பார்கள். ஆனால் தேர்தல் முடிந்ததும், அதையெல்லாம் மறந்து விடுவார்கள் என்றேன்.

சிறிலங்காவின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காகத் தேர்தல் நடைபெறப் போவதாக அறிவிக்கப்பட்டிருக் கிறது. வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதற்காகத் திகதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் நடைபெறும் திகதியும் அறிவிக்கப்பட்டு விட்டது. தேர்தலில் போட்டியிடுவதற்கும், கட்சிகள் தயாராகிக்கொண்டிருக்கின்றன.

இலங்கையில் அதிகாரத்துக்கு வருவதற்காக இரண்டு பெரிய கட்சிகள் தான் பிரதானமாகப் போட்டி போடுவது கடந்த பல வருடங்களாக நடைமுறையிலிருந்து வரும் வழக்கம். இம்முறையும் இரண்டு பெரிய கட்சிகளுமே போட்டிக்குத் தங்கள் வேட்பாளர்களை முதலில் அறிவித்துக் களத்தில் குதித்திருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா போட்டிக்கு நிற்கிறார். ஜனாதி பதித் தேர்தல் இவ்வருடமா அடுத்த வருடமா என்ற சர்ச்சை தொடங்கியதுமே, இவ்வருடம் தான் ஜனாதி பதித் தேர்தல் நடைபெற வேண்டுமென்று குரல் கொடுத்துக் களத்தில் குதித்தவர் ரணில் விக்கிரமசிங்க. அவர் களத்தில் குதித்துவிட்டார் என்பதற்காக சிறி லங்கா சுதந்திரக்கட்சியும் அதன் வேட்பாளராக பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷவை அறிவித்தது.

அதிகாரப் பரவ லாக்கலுக்கு வழி வகுக்கும் சமஷ்டி ஆட்சி அமைப்பைக் கொண்டு வந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துப் பிரசாரம் தொடங்கினார். இந்தச் சமயம் பார்த்து சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதி பதியுமான சந்திரிகா அம்மையார் வெளிநாடு போனார். 1956ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா தொடங்கிய எழுச்சிக்குப் புத்துயிர் கொடுத்து உங்களை ஜனாதிபதி யாக்குகிறோம் என்று மகிந்தவுக்கு உஷார் கொடுத்த ஜே.வி.பி அவருடன் ஓர் உடன்படிக்கையும் செய்து கொண்டது. இப்படி ஆயத்தம் செய்ததும் புத்தபிக்குகளின் ஹெல உறுமய சும்மா இருக்க முடியுமா? அதுவும் பச்சைக் கட்சிக்கு ஒரு படி மேலே போய் மகிந்தவுடன் மற்றொரு உடன்படிக்கையைச் செய்தது என்று பரமசிவம் சொன்னார்.

நல்லவேளை 1956இல் பண்டாரநாயக்க சிங்களம் மட்டும் என்று சொன்னதும் அதிலும் தனிச் சிங்களம் என்று யு.என்.பி ஒரு படி மேலே போன மாதிரி இப்போதும் யு.என்.பி கிளம்பாமல் சமஷ்டி என்று அடித்துச் சொல்ல முன் வந்திருப்பது பாராட்டுக்குரியது என்று நான் சொன்னேன்.

சமஷ்டி என்று இப்பொழுது சுதந்திரக்கட்சியும் சொல்லத்தொடங்கிவிட்டது. மகிந்தவும் இதே சமஷ்டிக் கொள்கையைத்தான் பின்பற்றுகிறார். சுதந்திரக் கட்சியின் கொள்கையையும் கோட்பாட்டையும் மகிந்த கைவிட மாட்டார் என்று அவரது அமைச்சரவை சகா நீதியமைச்சர் ஜோன் செனவிரத்தினா சொல்லியிருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

அதாவது தேர்தல் வாக்குறுதிகள் என்றால் காற்றில் பறக்கவிடும் பட்டம் போன்றவைதான். உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டாலும் தேர்தல் முடிந்த பின் வேறு வழியைப் பார்க்கலாம் என்று சுதந்திரக்கட்சி தீர்மானித்துவிட்டதாக்கும் என்றேன்.

இதென்ன புதிய விஷயமா? கடந்த பல தேர்தல்களிலும் போட்டியிட்ட தலைவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எவையாவது நிறைவேற்றப்பட்டதா? நிறைவேற்றுவதற்கான முயற்சிகளாவது மேற்கொள்ளப்பட்டதா? தேர்தல் வாக்குறுதிகள் என்றாலே அவை நிறைவேறாதவை என்று மக்களே முடிவு செய்து விடுவார்கள். இப்போதும் தேர்தல் வாக்குறுதிகளைப் பின்பற்றி வாக்குறுதி கொடுப்பவர்களும் கவலைப்படுவதில்லை. அதைக் கேட்கும் மக்களும் தேர்தல் வாக்குறுதிகள் தானே என்று அக்கறைப்படுவதுமில்லை என்று பரமசிவம் சொன்னார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, இப்பொழுது சிங்கள அரசியல் கட்சிகள் தாங்கள் அதிகாரத்துக்கு வருவதற்காகக் கொடுக்கும் வாக்குறுதிகளைப் பற்றியோ, அவர்கள் அதிகாரத்துக்கு வந்தபின் எடுக்கும் நடவடிக்கைகளைப் பற்றியோ கவலைப்படுவதற்குத் தயாராக இல்லை என்று நான் சொன்னேன்.

தமிழ் மக்கள் இனியும் பேச்சு வார்த்தை என்பது பற்றியோ சமஷ்டி ஆட்சி அமைப்புப் பற்றியோ சிங்கள அரசியல் தலைவர்களும், கட்சிகளும் இனியும் பேசிக்கொண்டிருப்பதிலும் அர்த்தமில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். இனியும் தமிழ் மக்கள் எதற்கும் பொறுமை காப்பதற்கும் தயாராக இல்லை. சர்வதேச சமூகம் இனியும் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. இழந்த தமிழரசை மீண்டும் அமைப்பதற்கு 1976ஆம் ஆண்டில் தமிழ்த்தலைவர்கள் ஒன்று கூடி எடுத்த முடிவுக்கு 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழர் தாயகமக்கள் அங்கீகாரமளித்து விட்டனர். இதை நிறைவேற்றியிருக்க வேண்டிய சிங்களஅரசுகள் இனக் கலகங்களைத் தூண்டிவிட்டுக் காலத்தைக் கடத்திப் பயங்கரவாதப் பூச்சாண்டியைக் கிளப்பி இன்னமும் தட்டிக் கழித்து வருகின்றனர்.

கிழக்குப் பாகிஸ்தானிலும் மக்கள் தேர்தலில் அளித்த அங்கீகாரத்தை மேற்குப் பாகிஸ்தான் அரசு நிராகரித்தபடியால்தான் இந்திராவின் தலையீட்டினால் கிழக்குப் பாகிஸ்தான் வங்காளதேசமாக மலர்ந்தது. இங்கும் தமிழர் தாயக மக்கள் அளித்த அங்கீகாரம் ஏற்றுக்கொள்ளப்படாததால் தமிழ் இளைஞர்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் ஆயுதம் ஏந்தி தமிழீழம் இன்று பெரும் பகுதி விடுதலை பெற்றுத்தலை நிமிர்ந்து நிற்கிறது. முழு விடுதலையையும் அடைவதற்கு மீண்டும் இரத்தம் சிந்தாமல், சர்வதேச நாடுகள் தமிழர் தாயக மக்களின் பொங்குதமிழ் எழுச்சியைப் பார்த்து தமிழீழ அரசை அங்கீகரிப்பதற்கு இனியும் தாமதிக் கக்கூடாது என்று சொல்லியபடி பரமசிவம் வாழ்க, தமிழீழம் வாழ்க, தமிழ் இனத்தின் ஒரே தலைவன் பிரபாகரன் வாழ்க என்று முழக்கமிட்டபடி நடந்தார்.

# எங்கள் நிலம் எமக்கு வேண்டும்



சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே,
அதைத் தரணிக்கெல்லாமெடுத்து ஓதுவோமே

என்று பாரதி கூறியதுபோல, உலகத்துக்கு உரத்த குரலில் தமிழர்களாகிய நாம் செம்மொழியுடைய உயிரினம். நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் மண்ணிலேதான் பல்லாண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அது எங்களுடைய சொந்த மண் என்று கூறுவதுதான் பொங்கு தமிழ். இந்த மண்ணுக்காக உயிர்நீர்த்த மாவீரர்கள் மனம் மகிழ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எடுத்த ஒரு அரிய முயற்சி பொங்கு தமிழ்.

நாம் பல இன்னங்களையும், துன்பங்களையும் அடைந்தபோது - எங்கள் குரல் உலக அரங்குக்கு எட்டாதிருந்த வேளையிலே, எங்கள் மொழியிலேயே உலகுக்கெல்லாம் பேரறிக்கை செய்தது பொங்கு தமிழ்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட இந்தப் புதுமையான முயற்சிக்குத் தமிழ்க் கரங்கள் உயர்ந்தன. உலகமே இதைக் கண்டு திரும்பியது. பார்த்து வியந்தது. ஆனால், பலன் கிட்டுவதற்குப் பல தடைகள் ஏற்பட்டன. பல சூழ்ச்சிகள் நடந்தன. இந்த நிலையிலேதான் 30.09.2005 வெள்ளிக்கிழமை மீண்டும் பொங்கு தமிழ் நடைபெறவுள்ளது. எமக்குச் சொந்தமான இடத்திலே நாங்கள் உரிமையுடன் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதை உலகுக்குப் பறைசாற்றுவதாக இந்தப் பொங்கு தமிழ் அமையவுள்ளது. தமிழர் ஒவ்வொருவரும் இந்தப் பொங்கு தமிழில் பங்கு பற்றவேண்டும். இது எங்கள் கடமை மாத்திரமல்ல, உரிமையும் கூட.

உலக நாடுகள் எங்களை அவதானித்துக்கொண்டிருக்கின்றன. வன்முறை எதுவுமின்றி, ஒற்றுமை என்னும் மதிப்பான உணர்வுடன் 'எங்கள் மண் எங்களுக்குச் சொந்தமானது' என்று தமிழ் மொழியிலே தமிழ்மக்கள் பொங்கு தமிழாலே ஒன்றுகூடி உரத்துக் கூறும்பொழுது, உலக நாடுகள் உண்மையை உணர்ந்து கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இதனை உறுதிப்படுத்துவதற்கு முதியோர், இளைஞர், எல்லாத்துறை சார்ந்த பெரியோர், வணிகப் பெருமக்கள், மாணவ சமூகம் முதலாய் - பொதுமக்கள் எல்லோரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில் ஒன்றுதிரண்டு உலகத்துக்கு உறுதியாக எங்கள் நிலமே எமக்கு வேண்டும் என்று கூறுவதற்கு வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்.**

# பொங்குதமிழ் விழாக்காண வா!

எம்மினத்தை நாமாள எழுந்திடுவோம் இணைந்திடுவோம்!
பொங்குதமிழ் விழாக்காண வா!

எம்மினத்தை அடுத்த இனம் ஆண்டநாள் மாண்டதென்று
பொங்குதமிழ் விழாக்காண வா!!


பேச்சு வார்த்தை எனக் கூறி காலம் கடந்ததல்லால்
வேறென்ன கண்டோம் சொல்!

பேச்சுவார்த்தைப் போர்வையுள்ளே விகாரைகள் அமைந்தன்றி
வேறென்ன அவர் செய்தார் சொல்!!

இடைக்கால நிர்வாகம் தருவதற்கே விரும்பமில்லாச்
சிங்களமே உடன் விலகிப் போ!

பேரலையால் துடிக்குமெம் மக்களுக்கு இரங்காத
போர் வெறிச் சிங்களமே போ!!

ஆட்சியென்ற போர்வையிலே இன அழிப்புச் செய்துவரும்
ஆட்சிவெறிச் சிங்களமே ஓடு!



எங்கள் மேலிருந்து சவாரி செய்யும் சிங்களமே
எம்மண்ணை விட்டுடனே ஓடு!!

எங்கள் தலையினிலே சம்பலரைக்கும் சிங்களமே
இங்கிருந்து உடன்விலகிச் செல்!

எங்கள் நிலம் எங்களுக்கே இங்குனக்கு இடமில்லை
சிங்களமே மண்ணைவிட்டு போ!!

அபிவிருத்திப் போர்வையிலே நிலம்பிடுங்கும் சிங்களமே
அகன்று விடெம் பொன்நிலத்தை விட்டே!

பாதுகாப்பு வலயமென்ற போர்வையிலெம் பொன்மண்ணை
பறித்துள்ள சிங்களமே போ!!

எம்மை நாம் ஆள்வதற்குத் திறமையுண்டு, தகுதியுண்டு;
சிங்களமே போதுமினிப் போ!

எங்கள் பொறுமையினைச் சோதிக்கத் துணியாதே!
சிங்களமே உடன்விலகிச் செல்!

பொங்குதமிழ் போதிக்கும் செய்தியிது தெளிந்து கொண்டு
சிங்களமே விரைந்தப்பாற் போ!!

**வயலூர் முருகன்**

செய்திக்கட்டுரை...

சந்தானகுமாரன்

# நாடும் நகரமும் தூய்மை பெற ஒத்துழைப்போம்



**'நோயற்ற வாழ்வே குறைவு அற்ற செல்வம்' என்பது பழமொழி.**

நோய் வந்ததன் பின்னர் அதைப் போக்க போராடுவதிலும் பார்க்க வருமுன் தடுக்க போராடுவது இலகுவான காரியம் ஆனால் இதைச் செயற்படுத்த மக்கள் ஒத்துழைப்புக் காட்டுவது குறைவாகவே உள்ளது.

இன்றைக்கு சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த எமது பாட்டன், பூட்டன் என்போர் எண்பது வயதிலும் கண் பார்வை சிறிதும் பழுதின்றி நிமிர்ந்த உடலோடு - கம்பீரமாக வாழ்ந்தார்கள். இதற்குக் காரணம் அவர்களின் சுகாதாரப் பழக்கவழக்கமும், போஷாக்கு நிறைந்த உணவுகளுமேயாகும்.

இன்றுயாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களை எடுத்துக் கொண்டால் 100 இற்கு 95 வீதத்தினர் ஏதோஒரு நோயின் தாக்கத்துக்குள்ளானவர்களாகவே காணப்படுகின்றனர். இதற்கு அவர்களின் உடம்பில் நோய் எதிர்ப்புசக்தி போதியளவு இன்மையே காரணமாகும்.

மலேரியா, நெருப்புக்காய்ச்சல், டெங்கு, வாந்திபேதி, யானைக்கால் போன்ற நுளம்பினாலும், நீரினாலும் பரவும் நோய்த் தாக்கம் கடந்த பல வருடங்களாக யாழ்ப்பாணக்குடாநாட்டில் அதிகரித்து செல்வதாக வைத்தியசாலைப் புள்ளிவிபரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

உண்மையில் இப்படியான நோய்களை முற்று முழுதாகவே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும். இதற்கு மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். வளர்ந்து வரும் நாகரீகத்துக்கேற்ப நாளுக்குநாள் உடை அலங்காரத்திலும், வீட்டு அலங்காரத்திலும், இன்னும் நாகரீகப்பொருட்களை வாங்குவதிலும் மிகுந்த அக்கறை காட்டும் மக்கள் தமது அயலில் உள்ள பற்றைகள், குப்பை கூழங்களை எரித்து அப்புறப்படுத்துவதில் நாட்டம் காட்டுவதில்லை.

இலட்சக்கணக்கில் செலவழித்து வீடுகளையும், மதில்களையும் கட்டுபவர்கள் தமது மதில் கரையோரமாகவும் அக்கம் பக்கத்துக் காணிகளுக்குள்ளும் பல வருடங்களாக வளர்ந்துள்ள பற்றைகளை குறுகிய செலவில் வெட்டி தீயிட்டு கொழுத்தி எரிக்காது விடுகிறார்கள்.

இந்தப் பற்றைகள் மழைக்காலத்தில் மேலும் ஓங்கி வளர்ந்து நுளம்பு பெருக்கமடைய காரணமாகின்றது. இளநீர் கோம்பைகள், வெற்றுப் பிளாஸ்ரிக் சோடாப் போத்தல்கள், தண்ணீர்ப் போத்தல்கள், உடைந்த பிளாஸ்ரிக் வாளிகள், ஐஸ்கிறீம் கப் போன்றவற்றையும் பற்றைகள் நிறைந்துள்ள காணிகளுக்குள் வீசிவிடுவதனால் அவற்றில் அழுக்கு நீர் நிறைந்து நின்று நுளம்பு பெருக்கமடைந்து மலேரியா, நெருப்புக் காய்ச்சல், யானைக்கால், டெங்குக் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவுகின்றன.

தற்பொழுது மிகுந்த வெப்பமுடைய கோடைகாலம் இந்தவேளையில் பற்றைகளை மிக இலகுவாக எரித்து விடலாம். ஆனால் இதற்குச் சிலர் முன்வருவதில்லை. அதற்கு அவர்கள் கூறும் காரணம் - அயலவர்களின் காணிகள், பற்றைகளை காணிச் சொந்தக்காரரே அப்புறப்படுத்த வேண்டும். நாங்கள் அத்துமீறிச் செயற்படமுடியாது. அப்படிச் செய்தால், அவர்கள் எம்மீது சட்ட நடவடிக்கை எடுப்பார்கள் எனக் கூறுகிறார்கள். இவர்கள் கூறுவதிலும் நியாயம் உண்டு தான். ஆனால் கிராம அலுவலர்கள் சுகாதாரப் பரிசோதகர்கள் மூலமாக இவற்றுக்கு இலகுவாகத் தீர்வு காணமுடியும்.

பல இடங்களில் உள்ள பொது கிணறுகள் மூலம் நான்கு, ஐந்து குடும்பங்கள் மோட்டார் மூலம் வீட்டின் தொட்டிக்கு நீர் நிறைக்கின்றனர். இதனையே குடி நீராகவும் பயன்படுத்துகின்றனர். ஆனால் அவர்கள் ஒரு நாளாவது கிணற்றை எட்டிப் பார்த்ததே கிடையாது. ஏதோ நீர் வந்தால் சரி என இருக்கிறார்கள். அவர்கள் பாவிக்கும் நீர் நிலை பல வருடங்களாகப் பாசிபிடித்தும், இலைகுழை விழுந்தும், பூச்சி, புழுக்கள் பிடித்தும், இறைத்துச் சுத்தம் செய்யப்பட்டாது காணப்படுகின்றன. சில இடங்களில் கோவில் தேவைக்குக் கூட இப்படிப்பட்ட பங்குக் கிணறுகளையே உபயோகப்படுத்துகிறார்கள்.

இது உண்மையில் மிகவும் பாதகமான செயலே. இப்படிப்பட்ட பாழடைந்த கிணறுகளுக்கு பொது சுகாதாரப் பரிசோதகர், மருத்துவ மாதர்கள் குளோரின் இடுவதில் எந்தவித பலனும் இல்லை. காலாவதியாகிய பொருட்களைக் கண்டு பிடித்து அழிக்கும் சுகாதாரப் பகுதியினர் தத்தமது கிராமத்திலுள்ள கிணறுகளை 3 மாதத்துக்கு ஒரு தடவையேனும் சென்று பார்த்து தண்டனை விதித்தால் நீரினால் ஏற்படும் நோய்களைத் தடுக்க முடியும்.

இன்னும் சில இடங்களில் முன்னர் பாவித்து, தற்பொழுது பாவிக்காமல் கைவிடப்பட்ட மலசல கூட குழிகள் - மூடிகள் இன்றியும், உடைந்தும் உள்ளன. கோடைகாலத்தில் கூட இவற்றிலிருந்து இலையான், கொசு, நுளம்பு என்பன உற்பத்தியாகின்றன என்றால் மாரிகாலத்தில் சொல்ல வேண்டுமா?

முன்னைய காலங்களைப் போல் அல்லாது, தற்போது ஒவ்வொரு வீட்டிலும் ஒருவராவது கனடா, பிரான்ஸ், ஜேர்மன், லண்டன் போன்ற நாடுகளில் வசித்து விட்டு தமது உறவினர் வீடுகளுக்கு வருகிறார்கள். அவர்கள் அந்த நாட்டின் சுகாதாரப் பழக்கவழக்கங்களை கூறுகிறார்கள். பொது இடங்களில் எச்சில் உமிழ்தல், சிகரட் துண்டுகளை வீசுதல், ரொபிப் பேப்பர்களை வீசுதல் போன்ற செயல்களுக்குக் கூட அங்கு அபராதம் விதிக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இவற்றைக் கேள்விப்படும் எம்மவர்கள் எமது நாட்டிலும் அப்படி செய்தால் தான் எமது நாடும் உருப்படும் என உடனே கூறுவார்கள். அந்த நாட்டிலிருந்து வருபவர்களின் கலை, கலாசார, உடை அலங்காரங்களைப் பின்பற்றுவதும், அவர்களின் பணத்தில் மாளிகை போல வீடுகளை கட்டுவோரும் ஏன் அந்த நாட்டவர்களைப் போல் நல்ல பழக்கவழக்கத்தைப் பின்பற்ற முடியாது.

'அடியாத மாடு படியாது' என்பது போல தொட்டதற்கெல்லாம் அபராதம் விதித்துத்தான் எமது சமுதாயத்தைத் திருத்த வேண்டுமா?

வளர்ந்து வரும் நாகரீக உலகில் வாழ்ந்து வரும் நாம் எமது அயலை சுத்தமாக வைத்திருப்பதில் ஒவ்வொருவரும் அக்கறை காட்ட வேண்டும்.

நகரப்பகுதிகளைப் பொறுத்தமட்டில் கடைக்காரர்களின் கழிவுப் பொருட்கள் கழிவு நீர் ஓடும் கால்வாய்களில் நிரம்பி அழுக்கு நீர்களை ஓடவிடாது தடுக்கின்றது. உதாரணமாகப் பொலித்தீன், ஷொப்பிங்பைகள், கடதாசி மட்டைகள், அன்னாசிப்பழமூழ்கள் போன்ற கழிவுப் பொருட்களை கண்டகண்ட இடமெல்லாம் வீசுகின்றனர். தமது கடையில் இல்லாது தெருவில் கிடந்தால் சரி என்னும் மனப்பாங்கில் வர்த்தக சமூகத்தினரும் செயற்படுகின்றனர். இதனால் பாதிப்படைவது முழுச் சமூகமுமே என்பதை அவர்கள் நினைப்பதில்லை.


இப்படிப்பட்ட அநாகரிகச் செயற்பாடுகளை தடுப்பதற்கு அந்தப் பகுதிப் பிரதேச சபைகள் குப்பைத் தொட்டிகளை அமைத்துக் கொடுத்து அதற்குள் கழிவுப் பொருட்களை போடுமாறு அறிவுறுத்த வேண்டும். இதற்கு செவிசாய்க்காத வர்த்தகரின் வியாபார உரிமை வழங்குவதை நிறுவத்துவது அல்லது அபராதம் விதித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

சுற்றாடல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு சில பிரதேச சபைகள் இது போன்ற நல்ல திட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளனர். ஆனால் இந்தத் திட்டம் குறிப்பிட்ட நாட்களுக்கு என்ற எண்ணப்பாடு இன்றி வருடம் பூராவும் நடைமுறைப் படுத்தினால் நாடும், நகரமும், கிராமமும் அனைத்தும் தூய்மை பெறும். இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்.

### தமிழ்த் தேசியத்தை அழித்துவரும்

# அரச மற்றும் வெளிச்சக்திகளுக்கு எதிராக தமிழ்மக்கள் எழுச்சி கொள்ளவேண்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் மாவை அறைகூவல்



யாழ்ப்பாணம்

தமிழ்த் தேசியத்தை அழித்து வரும், அரச மற்றும் வெளிச் சக்திகளின் பயங்கரவாதத்துக்கெதிராக தமிழ்த்தேச மக்கள் விழிப்படைய வேண்டும், எழுச்சிகொள்ள வேண்டும். விடுதலைப் பயணத்தில் இணைந்துகொண்டு ஜனநாயக கடமையை நிறைவேற்றவேண்டு அழைப்பு விடுக்கின்றோம் என நாளை மறு தினம் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கையில் தமிழர் தேசத்தில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன. தமிழ்த் தேசமக்களின் இதய தாகத்தை வெளிப்படுத்தி வவுனியாவில் மீண்டும் சுதந்திரப் பிரகடனம். அதைத் தொடர்ந்து மட்டக்களப்பில், கிளிநொச்சியில், முல்லைத்தீவில் தொடர்ச்சியாய் எழுச்சிப் பிரகடனம் உலகத்திற்கு எடுத்துக் காட்டப்பட்டது. மன்னாரில் இன்றும், யாழ்ப்பாணத்தில் நாளை மறுதினமும் தமிழர் தாகம் சுதந்திரப் பிரகடனமாய் பொங்கி எழவுள்ளது.

17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் (1619இல்) யாழ்ப்பாண அரசு ஐரோப்பியரிடம் போரிலே தன் சுதந்திரத்தை இழந்தது. 19 ஆம் நூற்றாண்டின் (181இல்) ஆரம்பத்தில் வன்னி அரசு, ஐரோப்பியரிடம் போரிலே தன் சுதந்திரத்தை இழந்தது. அதுவரை தெற்கில் சிங்கள அரசுகளும், வடக்கில் தமிழ் அரசுகளுமே ஆட்சியிலிருந்தமை வரலாறு. ஆங்கிலேயர் தம் ஆட்சி நிர்வாக வசதிக்காக 1833 இல் தாம் கைப்பற்றிய சிங்கள அரசுகளையும், தமிழ் அரசுகளையும் ஓர் ஆட்சி நிர்வாகத்தில், ஒற்றையாட்சியில் இணைத்தனர். இன்றிருக்கும் இலங்கையின் பின்னணி இதுதான்.

1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் என்பது சிங்களவருக்கே வாய்ப்பாய் அமைந்துவிட்டது.

ஆனால் யாழ்ப்பாண அரசு மக்களோ, வன்னி அரசு மக்களோ தமிழர் பாரம்பரிய தாயகத்து மக்கள் தமக்குரித்தான 'இறைமையை' அரசு உரிமையை ஐரோப்பியரிடமோ, சிங்களவரிடமோ இழக்கவில்லை. ஏனெனில் இறைமை என்றும் மக்களிடமே இருக்கிறது. கடந்த 400 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்த் தேசிய இனத்தின் நிலைப்பாடு இதுதான்.

மேலும் டொனமூர் அரசியல் திட்டத்தையோ, சோல்பரி அரசியலமைப்பையோ அல்லது சிங்கள அரசு ஆட்சிகளினால் உருவாக்கப்பட்ட எந்த அரசியலமைப்பையோ, ஒற்றையாட்சி முறையையோ, இலங்கை ஒரே அரசு ஒரே நாடு என்ற கொள்கையையோ தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு சம்மதம் கொடுக்கவுமில்லை.

இதன் பின்னணியில் இறைமை கொண்ட தமிழ்மக்கள் ஐரோப்பியரிடம் இழந்த சுதந்திர ஆட்சி உரிமையை மீட்பதற்கு உரித்துடையவர்கள். ஐ.நா மற்றும் சர்வதேச மாநாட்டு தீர்மானங்களால் நாம் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் நாம் சுயநிர்ணய உரிமையுடைய மக்கள், எங்கள் அரசியல் எதிர்காலத்தை நாமே தீர்மானித்து, நிலைநாட்டும் உரிமையுடைய இனம். அதற்கும் மேலாக அண்மைக்காலங்களில் கனடா நாட்டு சமஷ்டி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படியும், தமிழ்த்தேசிய இனம் உள்ளக சுயநிர்ணய உரிமையைக் கொண்டு தன்னாட்சி உரிமையை நிலைநாட்டவும், அவ்வாறில்லையெனில் வெளிச் சுயநிர்ணய உரிமையைப் பாவித்து தம் சுதந்திர உரிமையை நிலைநாட்டும் உரிமையுடைய மக்கள் கூட்டமாகவுள்ளனர்.

மறுபக்கத்தில் ஒரு தேசமென்று சொல்லப்படும் அரசுக்குள் போரின் மூலமாகவோ வேறு வல்லாண்மை வழிகளிலோ நீடித்து நிலைநாட்டி நிற்கின்றதும் எல்லை வரம்புகளைக் கொண்டதுமான ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டிருக்கும் ஆள்புலத்தை ஒப்பந்தங்களிலோ, அரசியல் தீர்வுகளிலோ சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்படும் நிலையை எட்டியுள்ளோம்.

போர் நிறுத்த உடன்படிக்கையினால் ஏற்பட்டுள்ள களநிலை இதுதான்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வல்லாண்மைப் பலத்தினாலும், அளப்பரிய உயிர்த்தியாகங்களினாலும், திடசங்கற்பத்தினாலும் பரிணமித்துள்ள பக்குவமான இராஜதந்திரத்தினாலும் 2002 பெப்ரவரி 22 ஆம் திகதி அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் தமிழ்த் தேச மக்கள் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய பரிணாமத்தையும் திருப்புமுனையையும் ஏற்படுத்தி நிற்கின்றன.

இந்நிலையை மேம்படுத்துவது அவசியமாகும். அதாவது 1920 களில் கண்டிய இளைஞர் சம்மேளனத்தால், கண்டியத் தலைவர்களால் டொனமூர் ஆணைக்குழு முன் விதந்துரைக்கப்பட்ட இணைப்பாட்சித் திட்டம் முதல் 1950 களில் தமிழ் அரசுக் கட்சியின் திருமலை மாநாட்டுத் தீர்மானங்கள், 1957 இல் பண்டார நாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம், 1965 இல் டட்லி - செல்வா ஒப்பந்தம், 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானம், 1977 பொதுத்தேர்தலில் தமிழ்த் தேச மக்களின் ஆணை, 1985 இல் திம்புக் கோட்பாடுகள் 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1995 இல் சந்திரிகா பண்டாரநாயக்கவின் அதிகாரப் பகிர்வுத்திட்டம்.

இவையெல் லாம் தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவமான அடையாளத்தையும், தமிழ்த் தேசியத்தின் அடித்தளமாயுள்ள தமிழர் பாரம்பரியத் தாயகத்தையும் தமிழ்த் தேசிய இனத்துக்குரித்தான தன்னாட்சி உரிமையையும் அங்கீகரித்து நிற்கின்றன.

2002 இன் போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலம் தமிழ்த்தேச மக்களின் ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தமிழர் தாயகப் பிரதேசங்கள் சிங்கள தேச அரசின் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதும் உயர்பாதுகாப்பு வலயம் என்று பிரகடனப்பட்டுள்ளதுமான பிரதேசங்கள் மீட்கப்படவேண்டியுள்ளன.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் தாய்லாந்திலும், ஒஸ்லோவிலும், ரோக்கியோவிலும், வொஷிங்ரனிலும் சர்வதேச நாடுகளின் மாநாட்டுத் தீர்மானங்களும் அண்மையில் ஐ.நா.பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களும், தமிழ்த் தேச மக்கள் போராட்டத்தின் நியாயத்தையும் இணைப்பாட்சி அடிப்படையில் இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதையும் வலியுறுத்தி நிற்கின்றன.

ஆனால், அண்மைக்காலத்திலும் சிங்கள தேசத்தின் ஜனாதிபதித் தேர்தலிலும் அதிகார வெறி மீண்டும் கற்காலத்தை நோக்கியதாய் சிங்கள - பௌத்த பேரினவாதப் பேரலை எழுச்சி கொண்டு வருகிறது.

மறுபுறத்தில் பயங்கரவாதம் எனும் பெயரில் தமிழ்த் தேச மக்களின் போராட்டத்தை அடக்கி ஒடுக்கி தமிழ்த் தேசிய இனத்தையே பூண்டோடு அழித்தொழித்து விடும் அரச பயங்கரவாதத்தை எழுச்சிகொள்ளச் செய்யும் வியூகங்கள் சர்வதேசத்திலும் கொழுந்து விடுகின்றன.

போர்நிறுத்த காலத்தை பயன்படுத்தி தமிழ்த் தேசத்தில் விரோத சக்திகளை ஊடுருவச்செய்து மக்களிடையே பிளவையும், கலாசாரச் சீர்குலைவுகளையும் ஊக்கப்படுத்தி வருவதிலும், தமிழர் தேசப்பாதுகாப்பு அரணைப் பலவீனப்படுத்துவதிலும் பேரினவாத சக்திகள் தீவிரங்கொண்டுள்ளன.

மறுபுறத்தில் தமிழ் குழுக்களைத் துணைப்படைகளாய் வளர்த்து போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவது மட்டுமல்லாமல் தமிழர் தாயகத்திலிருந்து தென்தமிழீழமாம் கிழக்கைப் பிரித்து விடவும் பாரிய சூழ்ச்சிகளைப் பேரினவாதசக்திகளும், இராணுவத்தினரும் பயன்படுத்தி வருவதையும் காண்கின்றோம்.

400 ஆண்டுகள் அடிமைத் தளையை அகற்றி, இழந்த சுதந்திரத்தை மீட்டு, தமிழர் தேசத்தில் சுதந்திர ஆட்சியை நிலைநாட்டும் தமிழர் போராட்ட வரலாற்றில் - கடந்த 50 ஆண்டுகளில் அண்மைக்காலங்களில் தமிழ்த்தேசமக்களின் போராட்டம் பெற்றிருக்கின்ற பரிணாம வளர்ச்சியை, இதற்காகத் தமிழ் மக்களும் போராளிகளும் செய்த அளப்பரிய தியாகத்தை இழப்போமா? சிங்களப் பேரினவாதத்திற்கும் தமிழ் தேச விரோதிகளின் சூழ்ச்சிகளுக்கும் பலியாகி விடுவோமா?

தமிழ்த் தேசத்தின் இளம் சமுதாயம் பல்கலைக்கழக மாணவர் சமுதாயம் நாளை மறுதினம் ஏற்பாடு செய்துள்ள பொங்குதமிழ் நிகழ்ச்சியில் அணிதிரள்வோம். எங்கள் இதய தாகத்தையும் சுதந்திர மூச்சையும் விடுதலைக் குரலையும் உரக்க உறுதியாய் உலகுக்குச் சொல்வோம் வாருங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சமாதானத்துக்கான இறுதி முழக்கமாக பொங்கு தமிழ் சங்கு முழங்கட்டும்!

## பல்கலை ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம்

விண்ணதிர முழங்கவுள்ள பொங்கு தமிழ் சங்கு சமாதானத்திற்கான எமது இறுதிப் பெருமுழக்கமாகட்டும். அது பேரினவாதிகளின் செவிகளில் போர்ப்பறை முழக்கமாக ஒலித்தால், அது சிங்கள தேசத்தின் துரதிஷ்டமே என நாளை மறுதினம் நடைபெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இன்று எம் முன்னால் தெளிவான ஒரு காட்சி தெரிகின்றது. மூன்று வருடங்களுக்கு முன் இருந்த மயக்கமான நிலைமை தற்போது இல்லை. தெற்கில் பேரினவாத அலை சூறாவளியாக வீசுகிறது.

ஏகாதிபத்திய சார்புடைய ஐக்கிய தேசியக் கட்சியினாலும் சரி, மகிந்த ராஜபக்ஷவின் அடிப்படை பௌத்த இனவாத பொதுஜன ஐக்கிய முன்னணி - ஜே.வி.பி.கூட்டாயினும் சரி அடிப்படை பேரினவாதிகளே. இரு தரப்பினரினதும், பேரினவாத அணுகு முறைகள்தான் வேறுபடுகின்றதேயொழிய அவர்களின் நோக்கம் ஒன்றேயாகும்.

சிங்கள - பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களின் உரிமைகளை ஒரு போதும் வழங்கப்போவதில்லை என்ற ஊரறிந்த உண்மையை உலகிற்கு நிரூபிப்பதற்காக மூன்று ஆண்டுகள் காத்திருந்தோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் சரத்துகளை அமுல் செய்யாமை, ஆறு கட்ட பேச்சின் முடிவுகளை அமுல் செய்யாமை, சுனாமி பொதுக் கட்டமைப்புக்கு உயர்நீதிமன்றம் விதித்த தடை, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபு குறித்து பேச்சுக்கள் நடத்தாமை ஆகிய அனைத்துமே பேரினவாதத்தின் தன்மையை சர்வதேசத்திற்கு தெளிவுபடுத்த போதுமானவை.

2001 இல் எமது அபிலாஷைகளை கூறினோம். 2005 இல் எமது அபிலாஷைகளை நிறைவேற்றாவிட்டால் நாம் யாது செய்வோமெனக் கூறுவோம்.

1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டபோது நாம் வெறுங்கையுடன் இருந்தோம். இன்று எமக்கென நடைமுறை அரசு உண்டு; முப்படைகளும் உண்டு; நிர்வாகக் கட்டுமானங்களும் உண்டு எனவே எமது சுயநிர்ணய உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்க அனைவரும் ஒன்றிணைவோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாயகமக்களின் துயரங்களை வெளிக்கொணர புலம்பெயர் மாணவர்களுக்கும் கடமையுள்ளது

## கனடா கால்ரன் பல்கலை தமிழ் மாணவர் செயற்குழு

ஒன்ராறியோ

தாயகத்தில் எமது மக்கள் படும் துயரங்களை வெளிக்கொணருவதிலும், அவர்களுக்கு நீதியான நிரந்தரமான தீர்வை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் தாயகத்தை விட்டு புலம்பெயர்ந்து வாழ்கின்ற மாணவர் சமுதாயத்திற்கு மிகப்பெரிய கடமை உள்ளதென நாளை மறுதினம் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ள பொங்குதமிழுக்கு வாழ்த்துத் தெரிவித்து, கனடா கால்ரன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் மன்ற செயற்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உலகனைத்தும் உள்ள தமிழ் மாணவர் ஒன்றியங்களுடனும் இத்தருணத்தில் இணைந்து எமது ஒற்றுமையின் பலத்தை வெளிப்படுத்தி இந்தப் பொங்குதமிழ் நிகழ்வுக்கு எமது பூரண ஆதரவை வழங்கி நிற்பதில் கால்ரன் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களாகிய நாம் பெருமை கொள்கின்றோம்.

கடந்த வருடம் கனடாவில் இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வு புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களின் உணர்வுகளை வெகுவாக வெளிப்படுத்தி நின்றது.

எமது மக்களின் உரிமைக்கு நாம் என்றென்றும் குரல் கொடுப்போம் என்பதற்கு இது ஒரு நல்ல சான்றாக விளங்கியது. இதை சர்வதேச சமூகம் உணர்ந்து தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க முழு மனதுடன் செயற்பட வேண்டும் என்று சர்வதேச சமூகத்தை இத்தருணத்தில் வேண்டிநிற்கின்றோம்.

மீண்டும் ஒரு முறை இப்பொங்கு தமிழ் நிகழ்வுக்கு கால்ரன் தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பில் எமது வாழ்த்துக்களை வழங்கி நிற்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பொங்குதமிழ் பிரசாரத்துக்கு சென்ற மாணவர்களைத் தடுத்த படையினர்!

யாழ்ப்பாணம் —

பொங்குதமிழ் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களை மண்டைதீவுக்குச் செல்ல கடற்படையினர் தடை விதித்தனர். எனினும் நீண்ட வாக்குவாதத்தின் பின்னரே படைத்தரப்பு இவர்களை பிரசாரத்துக்குச் செல்ல அனுமதித்தது.

இது குறித்து தெரியவருவதாவது -

நேற்று நண்பகல் 12 மணியளவில் சுமார் 150 மாணவர்கள் பொங்குதமிழ் பிரசாரங்களுக்காக மண்டைதீவுக்குச் செல்ல அனுமதி கோரியபோது கடற்படையினரால் அனுமதி வழங்கப்படவில்லை.

இதனையடுத்து மாணவர்கள் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ். மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கஜேந்திரன் மற்றும் சிவனேசன் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று கடற்படையினரோடு பேச்சுவார்த்தை நடத்திய போதும் மண்டைதீவுக்குச் செல்ல படையினர் அனுமதி வழங்கவில்லை.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டதுடன், யாழ். கடற்படைத் தளபதியுடன் பேச்சு நடத்தியதையடுத்தே, அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னாரில் கைதான பொலிஸாருக்கு 11ஆம் திகதிவரை விளக்கமறியல்!

கிளிநொச்சி —

மன்னாரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்த போது விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டு தமிழீழ காவல்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மூன்று பொலிஸாரையும் மேலும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

மூன்று பொலிஸாரும் கைது செய்யப்பட்டமை தொடர்பாக தமிழீழ காவல்துறையின் பரிசோதகர் பவானி நீதியாளருக்கு தெரிவிக்கையில் -

போர் நிறுத்த உடன்பாட்டின்படி எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றி உள்நுழைந்தமையானது தவறாகும். தவறாக நுழைந்து விட்டோம், இடம் தெரியாது என்று கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் இவர்கள் ஒரு படைப்பிரிவைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

அத்துடன், எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்நுழைந்தபோது சிவில் உடையில் தோற்றமளித்தனர் முதல் விசாரணையின் போது தம்மை இனம் காட்டிக்கொள்ள மறுத்துவிட்டனர். இவர்களுடைய உள்நுழைவானது சதி நோக்கமாக இருக்கலாம். அது தொடர்பான புலன் விசாரணைகள் இடம்பெற்றுவருவதால் இவ்விசாரணைகளை மேற்கொள்வதற்கு 14 நாட்கள் கால அவகாசம் வழங்கவேண்டுமெனக் கோரினார்.

மூன்று பொலிஸாரின் சார்பில் வாதிட்ட சட்டவாளர் ரி.எஸ்.வேலவர் சமர்ப்பித்த ஆவணங்களை தமிழில் மொழிபெயர்த்து சமர்ப்பிக்கும்படியும், தமிழீழ காவல் துறையினர் மூன்று பொலிஸார் தொடர்பாக குற்றவரைவினை வரையறை செய்து மன்றுக்கு சமர்ப்பிக் கும்படியும், இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணைகள் எதிர்வரும் 11.10.2005 இடம்பெறும் எனவும், அதுவரை மூன்று பொலிஸாரையும் தடுப்புக்காவலில் வைக்குமாறு மாவட்ட நீதியாளர் சாதனா உத்தரவிட்டார்.

### சந்திரிகா நாடு திரும்பினார்!

கொழும்பு —

ஐ.நா.கூட்டத்தொடரில் பங்கேற்க நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா நேற்று மாலை 5.30 மணியளவில் நாடு திரும்பினார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடனான முரண்பாடுகள் தீவிரமடைந்ததால் திட்டமிட்டதைவிடவும் சுமார் ஒருவார காலம் தாமதமாகவே இவர் நேற்று கொழும்பு திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகள் நோர்வேக்கு...

இராஜதந்திரமாகவே அணுகுவார்கள். எனினும், சிங்கள பேரினவாத தரப்பிலிருந்து இது பாரிய வெற்றி போலவும், விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த பாரிய தோல்வி போலவும் சித்திரிக்கப்படலாம். இதனை அவ்வாறு எடுக்கவேண்டிய அவசியமில்லை.

நோர்வே செல்வதற்கு விடுதலைப் புலிகளுக்குத் தடை இருக்காது. ஐரோப்பிய ஒன்றியம் என்ன முடிவெடுத்தாலும் நோர்வேக்கு ஒரு மதிப்புள்ளது. இது எதிர்காலத்தில் எவ்வாறு அமையும் என்பது காலப்போக்கிலேயே தெரியும் என அவர்கள் தெரிவித்தனர்.

## இன்று தமிழ்த் தேசிய...

பெ.சந்திரசேகரன், மேல்மாகாண மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், முஸ்லிம் - பௌத்த மத பிரமுகர்கள் என பெருமளவானோரர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தென்னிலங்கை மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள் நேற்றைய தினமே மன்னாருக்கு படையெடுத்துள்ளனர்.

எழுச்சி மாநாட்டுக்கு செல்வதற்கு வசதியாக நேற்றிரவு 10 மணிவரை மன்னார் - உயிலங்குளம் இராணுவ சோதனைச் சாவடி திறந்திருந்தது. இன்று நிகழ்வு முடிந்த பின்னர் எழுச்சி நிகழ்வுக்கு வந்திருந்த மக்கள் திரும்பிச் செல்வதற்கு வசதியாக நிகழ்வு முடிந்த நேரத்திலிருந்து மூன்று மணித்தியாலம் வரை வீதியை திறந்திருப்பதற்கு மன்னார் இராணுவ கட்டளை அதிகாரி பிரிகேடியர் ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார்.

## தொடரும் வன்முறை...

இடம்பெற்ற கொலைகளுக்கு ஐரோப்பிய யூனியன் கண்டனம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்புப் பட்டியலில் சேர்க்க கவனம் செலுத்தப்படுவது தொடர்பாக, விடுதலைப்புலிகளின் குழுக்களை ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்குள் அனுமதிப்பதில்லை என்ற உடனடி அமுலாக்கல் கொள்கைக்கு இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை, ஐரோப்பிய யூனியனின் நாடுகளுக்குள் தேவையானால் புலிகளின் நிதிசேகரிப்பு மற்றும் பிரசாரங்களை கட்டுப்படுத்தும் யோசனைக்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் அனைத்துத் தரப்பும் அச்சம் ஏற்பட்டுள்ள நிலையைப் போக்கி நாட்டின் சமாதான முனைப்புகளுக்கு தமது பங்களிப்பை வழங்கவேண்டும் என்றும் ஐரோப்பிய யூனியனின் சார்பில் பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது. (01)

## லொறி விற்பனைக்கு

எமது சங்க பாவனையிலுள்ள 42 - எனும் தொடரிலக்கமுடைய ISUZU லொறி மிகவும் நல்லநிலையில் உள்ளது. உடன் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோரும், எமக்கு நல்ல நிலையில் உள்ள லேடன் லொறி Super Ceme அல்லது Super Daskar தேவை. அதை விற்க விரும்புவோரும் எம்முடன் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் காலை 11 மணிமுதல் பிற்பகல் 02 மணிவரை நேரடியாகத் தொடர்புகொள்ளவும்

நெறியாளர் குழு சார்பாக,
செயலாளர் கா.பாஸ்கரன்

(சு-4675)

தொடர்புகளுக்கு :
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
39, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

## பிரிவினையில்லாத அரசியல்தீர்வு...

கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் ஒருமித்த இணக்கப்பாடுகள் இருக்கின்றன.

இதன் மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதற்கு சர்வதேசத்தின் முழுமையான உதவியும் கிடைத்துள்ளது. இந்தநிலையில் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

சுனாமி தொடர்பிலான வழக்கின் மூலம் போர் நிறுத்த உடன்படிக்கையின் செல்லுபடித்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, அதனை மையமாகக் கொண்டு பேச்சுக்களை முன்னெடுக்கமுடியும்.

போர் நிறுத்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டபோது, இருந்ததைக் காட்டிலும், தற்சமயம் புதிய நிலைமைகள் ஏற்பட்டிருப்பதால், அதற்கு அமைய போர் நிறுத்தக்கண் காணிப்புக் குழு செயற்படுவதற்கான வழிமுறைகள் வகுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

போர்நிறுத்த உடன்படிக்கையைச் செயற்படுத்துவதில் அரசாங்கத் தரப்பில் பலவீனங்கள் காணப்படுகின்றன.

எனவே, பலம் வாய்ந்த காவல்துறை அமைக்கப்பட்டு, அதன் கட்டமைப்பும் சீரமைக்கப்படவுள்ளது.

இதன் மூலம் அனைத்து தரப்பு படுகொலைகளும் நிறுத்தப்படும்.

வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்கு சமாதானத்தின் பெறுபேறுகள் சென்றடையும் வகையில் வழிகளை மேற்கொள்வதுடன், வடக்கு-கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்காக பிரத்தியேக அமைச்சு ஒன்றும் உருவாக்கப்படும்.

டோக்கியோ பிரகடனத்தின்படி இறுதித்தீர்வு ஒன்றை அடையும் வரை ஒஸ்லோ பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதுடன், முஸ்லிம் பிரதிநிதிகள் குழு ஒன்றை சமாதான பேச்சுவார்த்தையில் பங்குபற்றச் செய்யப்படும்.

அதே நேரம் சுனாமிக்குப் பின்னரான கட்டமைப்பில் முஸ்லிம்களின் பங்கேற்பும் உறுதிப்படுத்தப்படும்.

பேச்சுவார்த்தையின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்ட பின்பு, அந்தத் தீர்வினை மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்கு முன் வைக்கப்படும்.

இதேவேளை, பணம் அச்சடிக்கப்படுவதை நிறுத்தி, ரூபாயின் மதிப்பு அதிகரிக்கப்படும். இதன் மூலம் பொருட்களின் விலை அதிகரிப்பு வேகத்தைக் கட்டுப்படுத்தி வருமானத்தினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சமுர்த்தி திட்டத்திற்குப் பதிலாக சுயசக்தி என்ற புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் கீழ் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு 1000 ரூபா முதல் நான்காயிரம் ரூபா பெறுமதியான உணவு முத்திரை வழங்கப்படவுள்ளது.

தேசிய இளைஞர் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்படும். இதன்கீழ் அபிவிருத்தி சட்ட அமுலாக்கல் மற்றும் சமாதானத்தின் பின்னர் இராணுவத்தில் குறிப்பிட்ட பணியாற்றிய இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

ஐந்து ஆண்டு காலப்பகுதியில் 10 லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

சுனாமியின் பின்னர் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 100 மீற்றர் தடை உடனடியாக நீக்கப்படும். சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகள் மூன்று மாதங்களுக்குள் திருத்தியமைக்கப்படும்.

பெண்களுக்கும் ஆண்களை ஒத்த நிலையில் சம்பளங்கள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்வித் துறையில் அனைவருக்கும் ஆங்கிலம் என்ற திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது. பொது இடங்களில் புகைப்பிடிப்பதற்கு தடை விதிக்கப்படும்.

திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், கோணேஸ்வரம் மற்றும் நகுலேஸ்வரம் ஆகிய கோயில்கள் பேணிப் பாதுகாக்கப்படும்.

பாதுகாப்பு தொடர்பாக 21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப நவீன ஆயுதப்படை ஒன்று உருவாக்கப்படும்.

6 படைத்துறையைச் சேர்ந்த ஒன்றிணைந்த படை அமைக்கப்படும்.

போர் வீரர்களுக்கென அமைச்சு ஒன்று உருவாக்கப்படும். அத்துடன், தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும்.

கிழக்கு மாகாண மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். இதனடிப்படையிலான மோதல்களைத் தடுக்க, இந்தியாவைப் பின்பற்றி பொலிஸ் ஒன்று அமைக்கப்படுமென அந்த விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## பொம்மை...

துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் ஐந்து வெற்று ரவைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

மரணமடைந்த பெண்ணின் சடலத்தை பிரதேச பரிசோதனைக்குட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, இராணுவ புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து பல தேசவிரோத செயல்களில் ஈடுபட்டதாலும், சமுதாய கலாசார சீர்கேடுகளுக்கு உறுதுணையாக இருந்ததாலும் இவருக்கு எம்மால் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயல்களை நாம் எதிர்பார்ப்பதுமில்லை, விரும்புவதுமில்லை. இது போன்று சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடனும், வேறு சில தேசவிரோதக் கும்பலுடனும் இணைந்து எம்மக்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கு இவ்வாறான மரணதண்டனை நிச்சயம் வழங்கப்படும் என எல்லாளன் படை என்ற பெயரில் துண்டுப்பிரசுரம் சம்பவ இடத்தில் ஆங்காங்கே வீசப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## ஓட்டோச் சாரதி...

களை இறக்கிவிட்டு திரும்பிக்கொண்டிருந்த போதே மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

மரணமடைந்த தென்னக் கோன் முதியன்சலாகே சுனிலின் சடலம் தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## பொங்குதமிழ்...

உடுப்பிட்டி சந்திவரை சென்று உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் மாணவர்களையும் திரட்டிக் கொண்டு புறாப்பொறுக்கி சந்திக்கு சென்று அங்கிருந்து குஞ்சக்கடை மூத்தவிநாயகர் கோவிலடி மண்டான்சாமியன் அரசடி, முடக்காடு, மாலுசந்தி, வதிரிச் சந்தியூடாக ஆரம்பித்த இடத்தைச் சென்றடைந்தது.

மற்றுமொரு பேரணி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து ஆரம் பித்து நெல்லியடி சந்தியூடாக கொடிகாமம் சந்தியூடாக கலிகைச் சந்தி மந்திகைச் சந்தி, பருத்தித்துறை நகர் வரை சென்று அங்கிருந்து தும்பளை வீதியைச் சென்றடைந்தது.

இந்தப் பேரணியில் கலந்து கொண்ட மாணவர்கள், வர்த்தகர்கள், வீதிகளில் நின்றிருந்த பொது மக்களை பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்ததுடன் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தனர். (12)

## வணிக முகாமைத்துவ பட்டப்படிப்புகள் கல்லூரி

D.C.M

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

Ist in.Com G.A.Q

2005/06 கல்வியாண்டு

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | வரதராஜன் |
| கணக்கியல் | - | முகுந்தன் |
| வர்த்தகம் | - | உமாகாந்த் |
| கணிதம் | - | அம்பி |
| ஆங்கிலம் | - | நிசாந்தன் |
| இந்துநாகரீகம் | - | ஸ்ரீஸ் |
| அரசியல் | - | கேதீஸ் |
| புவியியல் | - | குமரன் |
| அளவையியல் | - | S.R.J.சுதன் |

ஆரம்பம் - 01.10.2005
சனி காலை 7.00 மணி (ப.நே)

எஸ்.வரதராஜன்,
இயக்குநர், D.C.M.

[C/4672]